பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 222

திங்கட்கிழமை
06 ஜூலை 2026

ஆனி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057




# காணிகளின் விடுவிப்புக்காக வடக்கில் தொடர் போராட்டம்

## பலாலி, கேப்பாபிலவில் வீதிக்கு இறங்கிய மக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 6

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள தங்களது பூர்வீகக் காணிகளை உடனடியாக விடுவிக்கக் கோரி, யாழ். பலாலி மற்றும் முல்லைத்தீவு கேப்பாபிலவு ஆகிய பகுதிகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொதுமக்களால் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் மற்றும் சிவில் அமைப்பினர் எனப் பலரும் நேரில் சென்று மக்களுக்கு தங்களது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

»15

# மருதங்கேணியில் காணி சுவீகரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 6

மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், பொதுத்தேவை ஒன்றுக்காக 11 ஹெக்ரேயருக்கும் அதிகமான காணியை நிலஅளவை செய்வதற்கான பகிரங்க அறிவித்தல் ஒன்றை நில அளவை திணைக்களம் விடுத்துள்ளது. பிரதேச செயலாளரின் 21.05.2026 திகதி

»15

# பஸ் கட்டணத் திருத்தம் இன்று முதல் நடைமுறை

கொழும்பு, ஜூலை 6

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அறிவிப்புக்கு அமைய, திருத்தப்பட்ட புதிய பேருந்துக் கட்டணங்கள் இன்று திங்கட்கிழமை முதல் நாடு முழுவதும் நடைமுறைக்கு வரவுள்ளன.

இந்தக் கட்டணத் திருத்தமானது இலங்கை போக்குவரத்து ச்பை (இ.போ.ச) மற்றும் தனியார் பேருந்துகள் உட்பட குறுகிய தூர, நீண்ட தூர மற்றும் சொகுசு பேருந்து சேவைகள் அனைத்துக்கும்

»14

# கொமேனி நினைவேட்டில் இலங்கை பிரதிநிதிகள் கையொப்பம்

தெஹ்ரான், ஜூலை 6

ஈரானின் ஆன்மீகத் தலைவர் அயதுல்லா அலி கொமேனியின் இறுதிச் சடங்கு அந்நாட்டுத் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்று வரும் நிலையில், அதில் இலங்கைத் தூதுக்குழுவினர் கலந்து கொண்டு

»15

# பண்ணையில் வாள்வெட்டு; தேடப்பட்ட சந்தேகநபர் கைது

விரிவு பக்கம்:-03

# விபத்தில் சிக்கிய முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

வீதியில் சைக்கிளில் பயணித்தபோது மோட்டார்சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த முதியவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்தார். நல்லூரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரான ஆறுமுகம் ஆனந்தசிவம் (வயது-72)

»15

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் இராணுவம்

கொழும்பு, ஜூலை 6

இலங்கையில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகம் உள்ள பகுதிகளை இலக்கு

»15



# மாவிலி பெரியதுறை வீதி சீரமைப்பு ஆரம்பம்

நெடுந்தீவு, ஜூலை 6

யாழ். நெடுந்தீவு மாவிலி பெரியதுறை வீதியை 135.90 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் மேம்படுத்தும் திட்டத்துக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்


»15

# நெடுந்தீவில் எரிபொருள் நிரப்பு நிலையம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். நெடுந்தீவு மக்களின் நீண்டகால தேவையாக இருந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை

»15



# நீர்கொழும்பு சிறையில் கைதிகளுக்குள் அடிதடி

## இருவர் மரணம், 35 பேர் காயம்

கொழும்பு, ஜூலை 6

நீர்கொழும்பு சிறைச்சாலையில் நேற்று மதியவேளையில் இரு கைதிகள் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட பயங்கர மோதலை அடுத்து, சிறைச்சாலை வளாகத்தில் கடும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த மோதல் சம்பவத்தில் இரு கைதிகள்

»15



"கைதியளுக்குள்ள கைகலப்பு நடக்கேக்க பொலிஸ்காரர் புளியம்பழம் பிடுங்கினவையோ?"

# தனிநபர் தரவுப் பாதுகாப்பு சட்டம் விரைவில் நடைமுறை

கொழும்பு, ஜூலை 6

தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் சில முக்கியமான பிரிவுகளை வரும் 2027ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கான விசேட வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது என்று டிஜிட்டல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின் போதே, டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண ஸ்ரீ தனபால இந்த விவரங்களை வெளிப்படுத்தி

»15

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 05.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4481 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 35 37 71 77 |
| விசேட எழுத்து | T |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 05.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1548 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 16 17 20 35 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 05.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0507 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 3 2 0 4 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 05.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2587 |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 08 55 72 74 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 05.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6239 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 5 6 1 9 3 9 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 05.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2269 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 01 03 25 79 |
| விசேட எழுத்து | L |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 05.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0355 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 10 18 64 |

# சுயநல அரசியல்வாதிகளாலேயே வடக்கு, கிழக்குப் போர் மூண்டது!

## கூறுகிறார் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

**கொழும்பு, ஜூலை 6**

**இலங்கையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவும், பணம் சம்பாதிப்பதற்காகவும் அரசியல்வாதிகள் கையாண்ட குறுகிய, சுயநல அரசியல் குறுக்கு வழிகளினாலேயே வடக்கு, கிழக்கில் தேவையற்ற கொடிய யுத்தம் உருவானது என்று கொழும்பு மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். இலங்கை இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் 75ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றுமுன்தினம் கொழும்பு புனித ஜோசப் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என்ற எவ்வித இன, மதப் பாகுபாடுகளும் இன்றி அனைத்து மக்களும் சகோதரர்களாக ஒன்றிணைந்தே சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டனர். அக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட தேசியக் கட்சிகள் நாட்டைச் சரியான பாதையில் முன்னோக்கிக் கொண்டு சென்றன.

எனினும், 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அரசியல்வாதிகள் கையாண்ட குறுகிய மற்றும் சுயநல அரசியல் குறுக்கு வழிகளினால் இந்த நாடு முற்றாக வீழ்ச்சியடைந்தது. வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட யுத்தமும் இத்தகையதொரு தேவையற்ற அரசியல் சுயநலத்தால் உருவானதே ஆகும். எமது நாட்டின் 75 ஆண்டுகாலப் பேரழிவுக்குப் பின்னால் இருப்பது இந்த அரசியல் குறுக்குவழிகளேயாகும்.

எமது நாட்டின் அரசியல் உலகை உற்றுநோக்கினால், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் பணம் சம்பாதிப்பதற்கும் எந்தவொரு தவறான செயலையும் செய்யத் துணியும் நிலையையே காணமுடிகின்றது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மக்கள் ஒரு தேர்தலை நடத்தி புதியதொரு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தனர். மக்கள் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றார்கள், எனவே அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்று எவரும் சிந்திப்பதில்லை. எப்போதும் மற்றவர்களின் கால்களை இழுத்து வீழ்த்தவே பார்க்கின்றனர் - என்றார். (ச-44)

# நீதித்துறை சுயாதீனத்துக்குள் புகுத்தப்படுகின்றது அரசியல்

## ஐ.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

சட்டத்தின் சுயாதீனத்தன்மைக்குள் அரசியலைப் புகுத்தி, ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. சட்டத்தின் சுயாதீனத்தன்மையை பாதுகாக்க எதிரணியால் முடிந்த அனைத்தையும் செய்வோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையை ஆட்சிசெய்த தலைவர்கள் சட்டத்தின் சுயாதீனத்தன்மையில் கைவைக்கவில்லை. அவ்வாறு நடந்த தரப்பினர் கடைசியில் வீட்டுக்குச் செல்ல நேரிட்டது. நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் தற்போது, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் திண்டாடுகின்றது.

இதனால் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் அணிதிரளும்போது, சட்டத்துறைக்குள் அரசியலைப் புகுத்தி, ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்கு முற்படுகின்றது. சட்டத்தின் சுயாதீனத்தைப் பாதுகாப்பதற்கு எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம் - என்றார். (ச-44)

# எதிரணி ஒன்றிணைந்தாலே ஆட்சியைக் கைப்பற்றலாம்!

## மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

எதிரணிகள் ஒன்றிணைந்து செயற்படும்பட்சத்தில் நிச்சயம் ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிரணிகளின் அரசியல் சிறந்த மட்டத்தில் உள்ளது. எதிரணி உறுப்பினர்கள் சிறையில் இருந்தாலும், அவர்களின் ஆதரவாளர்கள் வெளியில் உள்ளனர். இந்த அரசாங்கம் பழிவாங்கல் நடவடிக்கையிலேயே ஈடுபட்டுள்ளது. எதிரணிகள் ஒன்றிணைந்து செயற்பட்டால் ஆட்சியைப் பிடிக்க முடியும். அதற்கான முயற்சிக்க வேண்டும் - என்றார். (ச-44)




# உயர்தர மறுமதிப்பீட்டுப் பெறுபேறுகள் வெளியீடு

கொழும்பு, ஜூலை 6

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் மறுமதிப்பீட்டுப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் தங்களது பெறுபேறுகளை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk மற்றும் www.results.exams.gov.lk ஆகியவற்றின் ஊடாகப் பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 05.07.2026 | ஞாயிற்றுக்கிழமை | 0947 | A | 6 3 2 9 6 7 |

**Super Ball DLB**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 05.07.2026 | ஞாயிற்றுக்கிழமை | 3213 | Y | 01 13 24 67 |

**சனிதா DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 05.07.2026 | ஞாயிற்றுக்கிழமை | V | 20 33 53 66 | 5374 |

**SASIRI DLB**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 05.07.2026 | ஞாயிற்றுக்கிழமை | 1043 | 14 38 49 |

**லக்ன ராசி DLB**

| திகதி | தினம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|
| 05.07.2026 | ஞாயிற்றுக்கிழமை | சிம்மம் 04 22 52 62 | 4925 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 05.07.2026 | ஞாயிற்றுக்கிழமை | L | 38 | 05 09 55 60 | 2389 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 05.07.2026 | ஞாயிற்றுக்கிழமை | W | 14 18 26 52 | 3039 |

# ஏமாற்றப்பட்டுவரும் மலையக மக்கள்!

## மக்கள் போராட்ட முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

1948 ஆம் ஆண்டு முதல் மலையகத் தமிழர்கள், அரசாங்கங்களால் ஏமாற்றப்பட்டுவருகின்றனர். இந்த ஏமாற்றுக் கலாசாரத்துக்கு முடிவுகட்டுவோம் என்று மக்கள் போராட்ட முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் வி.வீரசிங்கம்,

1948ஆம் ஆண்டு முதல் மலையக மக்கள் ஏமாற்றப்பட்டுவருகின்றனர். வாக்குகளைக் கொள்ளையடிப்பதே ஆட்சியாளர்களின் நோக்கமாக இருந்ததே தவிர, பிரஜைகள் என்ற வகையில் மலையக மக்களுக்கு கிடைக்கப்பெற வேண்டிய உரிமைகள் வழங்கப்படவில்லை.

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வாக்களித்தனர். ஆனால் அந்த அரசாங்கமும் கடந்த ஈராண்டுகளாக மலையக மக்களை ஏமாற்றிவருகின்றது. எனவே, எமது மக்கள் இனிமேலும் ஏமாற்றப்படுவதற்கு இடமளிக்கமாட்டோம். ஏமாற்றும் கலாசாரத்தை மாற்றுவோம். டித்வா புயலால் பாதிக்கப்பட்ட ஏனைய மக்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ள அனைத்தும், மலையக மக்களுக்கும் வழங்கப்படவேண்டும்-என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# புதிய திறன்காண் கல்விச் சீர்திருத்தம் மனைக்கல்வி முறைக்கு முற்றுப்புள்ளி!

## கல்வியமைச்சர் ஹரிணி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 6**
**பாடப்புத்தகங்களை மனனம் செய்து பரீட்சை எழுதும் பழைய கல்விமுறையிலிருந்து விடுபட்டு, மாணவர்களின் நடைமுறை அறிவு மற்றும் திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் புதிய கல்விச் சீர்திருத்தச் செயல்முறையை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தி வருகின்றோம் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
எதிர்வரும் 2027ஆம் ஆண்டில் நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தப் புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கான அனைத்து ஆரம்பகட்ட ஆயத்தங்களும், தற்போது கல்வி அமைச்சின் ஊடாக மிகவும் திட்டமிடப்பட்ட முறையில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டு வருகின்றன.
பாடசாலையிலிருந்து கல்வியை முடித்துக் கொண்டு உலகுக்குச் செல்லும் ஒவ்வொரு பிள்ளைக்கும், தங்களின் உள்ளார்ந்த திறமைகளுக்குப் பொருத்தமான வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படும். தற்போதைய நவீன உலகளாவிய தொழிற்சந்தையில் அதிக தேவையைக் கொண்டுள்ள தொழில்முறை மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகளை அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமாக வழங்குவதே அரசாங்கத்தின் பிரதான இலக்காகும். நமது சமூகத்தில் பல்கலைக்கழகக் கல்விக்கு வழங்கப்படும் அதே சமமான மரியாதையையும், சமூக மதிப்பையும் தொழிற்கல்வித் துறைக்கும் பெற்றுக்கொடுப்பதே எமது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். உலகை ஆக்கபூர்வமாகவும் விமர்சன ரீதியாகவும் பார்க்கக்கூடிய திறமையான பிள்ளை கள் நம்மிடம் இருக்கிறார்கள். அவர்களைப் புதிய தொழில்நுட்பம் மற்றும் நவீன அறிவுடன் உலகத் தரத்திற்கு மாற்றுவதற்கான தகுந்த நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகின்றோம்- என்றார். (ச-இ)

## பண்ணையில் வாள்வெட்டு; தேடப்பட்ட சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 6
பல்வேறு குற்றச்சாட்டுகளில் நீண்ட நாள்களாக தலைமறைவாகியிருந்த சந்தேகநபர் ஒருவர், ஊர்காவற்றுறை உப பொலிஸ் பரிசோதகர் வினோத் தலைமையிலான குழுவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
யாழ். பண்ணைப் பகுதியில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்திருந்தார். குறித்த நபரின் விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில், அவர் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் குருநகர்ப் பகுதியில் தலைமறைவாக இருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து ஒரு வாளும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவர் மீது ஊர்காவற்துறை நீதிமன்றில் 3 வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-23)

## விவசாயக்கண்காட்சி

மாகாண விவசாயத் திணைக்களத்தின் வழிகாட்டல் ஆலோசனையின் கீழ், காமதேனு ஒருங்கிணைந்த இயற்கை விவசாயப் பண்ணை நடத்தும் மாபெரும் இயற்கை விவசாயக் கண்காட்சி, உடையார்கட்டு வடக்கிலுள்ள பண்ணையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இதில் இயற்கை விவசாயம் தொடர்பான 15 க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் வழிகாட்டல் ஆலோசனைகள், இயற்கை விவசாய உள்ளீடுகள், இயற்கை பூச்சி விரட்டிகள், மேம்பட்ட இயற்கைப் பொருள்கள், உள்ளூர் விதை வகைகள், பண்ணைச் சுற்றுலா, சுற்றுச்சூழல் நட்பு செயற்பாடுகள், பாதுகாப்பு, ஒருங்கிணைந்த இயற்கை விவசாய முறை உள்ளிட்டவை இடம்பெறும். இந்தக் கண்காட்சி இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளமை குறிப்

## சட்டவிரோதமான மீன்பிடி; 27 பேருக்கு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 6
கடந்த ஜூன் மாதம் 16ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் உள்நாட்டுக் கடற்பரப்பில் சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 27 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்படை தெரிவித்துள்ளது.
அத்துடன், அவர்களிடம் இருந்த 10 டிங்கிப் படகுகள் மற்றும் 2 கனோய் படகுகளும் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக திருகோணமலை, மூதூர், யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள அலுவலகங்கள் மற்றும் மருதங்கேணி பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## அக்குரேகொட இரட்டைக்கொலை; மாலைதீவில் சிக்கிய சந்தேகநபர்

மன்னார், ஜூலை 6
அக்குரேகொட பகுதியில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் மாலைதீவில் கைது செய்யப்பட்டுள்ளார்.
துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் பயணித்த காரின் சாரதியாகச் செயற்பட்ட சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இலங்கையின் விசேட பொலிஸ் குழுவொன்றினால் மாலைதீவில் கைது செய்யப்பட்ட அவர், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சிறு துரும்பும்....!

தமிழக முதலமைச்சர் விஜயை தமிழ்த் தேசியப்பேரவைக்காரர் சந்திச்சிருக்கினம். வெறும் சம்பிரதாயச் சந்திப்போட நிக்காமல் இலங்கை இனப்பிரச்சினை, மீனவர் பிரச்சினை எண்டு கனநாளாத் தீர்க்கப்படாமல் இருக்கிற விசயங்களில கவனம் செலுத்தி, அதுகளைக் கெதியாத் தீர்க்க முயற்சி எடுங்கோ எண்டும் கோரிக்கை வைச்சிருக்கினம். எங்களுக்கு ஒண்டெண்டால் உடன ஓடி வாறது தமிழகம் தான். என்னதான் இந்தியா எங்களுக்குச் சப்போர்ட் பண்ணினாலும், டெல்லி அரசாங்கம் தன்ர தேவைக்காகத் தான் எங்களைப் பாவிக்கிறது. ஆனால் அதே இந்தியாவின்ர மாநிலமா இருக்கிற தமிழகம் அப்பிடியில்லை. அங்க இருக்கிறவையும் தமிழர் எண்டதால எந்த எதிர்பார்ப்புமில்லாமல், எங்களுக்காக தமிழகச்சனம் தானாவே வந்து உதவி செய்யிறதை கன சந்தர்ப்பங்களில பார்த்திருக்கிறம். இலங்கையில இந்தியன் ஆமிவந்து, எங்களை அடக்கி, அழிச்சு, அட்டூழியம் செய்யேக்ககூட தமிழகம் தான் எங்களுக்குச் சப்போர்ட்டா இருந்தது. அப்பிடிப்பட்ட தமிழகத்துக்குப் புதிசா முதலமைச்சரா வந்திருக்கிற விஜயைச் சந்திக்கிறதும், எங்கட பிரச்சினையளை அவருக்குத் தெரியப்படுத்தி அதுகளைத் தீர்க்க உதவிசெய்யுங்கோ எண்டு கோரிக்கை வைக்கிறதும் நல்ல விசயம்தான். விஜய் முதலமைச்சரா வந்த பிறகு, இலங்கையில இருந்து போய் அவரைச்சந்திச்ச முதலாவது அரசியல்வாதியள் பேரவைக்காரர் தான்.


ஆனால் இதிலதான் ஒரு பகிடி இருக்குது. பேரவைக்காரருக்கு இந்தத் தமிழகப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்து குடுக்கிறது விடுதலைச் சிறுத்தைக்காரர்தான். அவைக்கும் இஞ்சத்தை பசுமை இயக்கக்காரருக்கும் இடையில நல்ல நெருக்கம். அதைவைச்சு, நாலைஞ்சு மாதங்களுக்கு முன்னமும் இதே பேரவைக்காரர் இந்தியாவுக்குப் போனவை. அப்ப விடுதலைச் சிறுத்தைக்காரர் அப்ப ஆட்சியில இருந்த தி.மு.க.காரரோடதான் கூட்டணி. அதால அப்பத்த தமிழக முதலமைச்சர் ஸ்டாலினில இருந்து சீமான் வரைக்கும் எல்லாக் கட்சிக்காரரையும் போய் சந்திச்சவை. ஆனால் விஜயை மட்டும் சந்திக்கேலை. இத்தனைக்கும் அப்பவே விஜயின்ர பிரசாரத்துக்கு சனம் அலைகடலா வருகுதெண்டும், விஜயால ஆட்சியைப் பிடிக்க முடியாட்டியும் ஒரு திருப்புமுனை சக்தியா இருப்பார் எண்டும் எல்லாரும் சொல்லத் தொடங்கின காலம். அப்பிடியிருந்தும் பேரவைக்காரர் விஜயைச் சந்திக்கேலை. அதுக்குக் காரணம், இந்தப் பயணத்தை ஒழுங்குசெய்த பசுமை இயக்கக்காரருக்கு முதலே விஜயைப் பிடிக்காது. அவர் ஒரு நடிகரா இருக்கேக்க அவரின்ர ரசிகக் குஞ்சுகள் செய்த வேலையால, அவருக்கு விஜயிலையும் கோபம். ஆனால் விஜய் நடிகர் எண்டதைத் தாண்டி, அரசியல்வாதியா அதுவும் அமோக ஆதரவு கொண்டவரா வரேக்க, முந்தின கோபதாபத்தை விட்டிட்டு அவரையும் அப்ப சந்திச்சிருக்க வேணும். அதைப்பற்றி அந்தப் பயணம் நடந்த஝ுட்டமே பட்சி சொன்னது.

பேரவைக்காரர் விஜயைச் சந்திக்காததுக்கு இன்னொரு காரணம், விஜய் ஆட்சியைப் பிடிப்பார் எண்டு இவையள் கனவுகூடக் காணேலை. சிறு துரும்பும் பல் குத்த உதவும் எண்டது பேரவைக்காரருக்கு அப்ப விளங்கேலை. ஆனால் இப்ப எல்லாத்தையும் காலம் கவிட்டுப் போட்டிட்டுது. இப்பவும் இவையின்ர பயணத்தை ஒழுங்குசெய்தது விடுதலைச் சிறுத்தைக்காரர்கள் தான். ஆனால் இப்ப அவை விஜயோட கூட்டணி. ஆட்சியிலும் பங்கு வாங்கி, அமைச்சராவும் இருக்கினம். அதாலதான் ஈஸியா விஜயைச் சந்திச்சு கோரிக்கையும் குடுத்திருக்கினம். இல்லாட்டி ஊசிக்கார எம்.பி. மாதிரி தலைமைச் செயலகத்துக்கு வெளியால நிண்டு படமெடுத்திட்டு, ஆரும் ஒரு அமைச்சரை மட்டும் தான் சந்திச்சுப் போட்டு வந்திருப்பினம். இனியாவது தங்கட தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைத் தூக்கி அங்கால வைச்சுப்போட்டு, எல்லாரும் தேவை எண்டு அனுசரிச்சுபோற அரசியலை எங்கடயாக்கள் முன்னெடுக்க இதுவொரு பாடம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

# ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
ஈழத்துச் சிதம்பரம் என வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகப் போற்றப்படும் காரைநகர் சிவன் ஆலயத்தின் புனருத்தாபன மகா கும்பாபிஷேகம் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை பக்திப் பெருக்கோடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகப் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுவந்த திருப்பணிகள் அனைத்தும் நிறைவுற்று, உலகெங்கிலும் வாழும் காரைநகர் மக்கள் மற்றும் அடியவர்களின் பெரும் பங்களிப்புடன் நிகழ்வு கைகூடியுள்ளது. இதுவரை காலமும் சிவன் மற்றும் ஐயனாருக்கு என இரட்டை இராஜகோபுரங்களுடன் விளங்கிய இவ்வாலயத்தில், தற்போது தெற்கு வாயிலில் எழுந்தருளியிருக்கும் சிவகாமசுந்தரி அம்பாளுக்காகப் புதிய இராஜகோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு, நேற்று கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மகா கும்பாபிஷேகப் பெருவிழாவில் தமிழகத்திலிருந்து திருக்கைலாய பரம்பரை தருமை ஆதீனம் 27 ஆவது நட்சத்திர குருமணிகள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், வேளக் குறிச்சி, செங்கோல், பழனி உள்ளிட்ட ஆறு ஆதீன சந்நிதானங்களும்,
திருவாவடுதுறையிலிருந்து ஆதீனப் புலவரும் கலந்து கொண்டு ஆசிகள் வழங்கினர். (ச-66-17)





# மாவட்ட கிரிக்கெட் போட்டியில் யாழ். அணி காலிறுதிக்குத் தகுதி

காலி, ஜூலை 6
தேசிய இளைஞர் சேவை மன்றங்களுக்கிடையிலான மாவட்ட ரீதியிலான விளையாட்டுப் போட்டிகளின், மென்பந்து கிரிக்கெட் தொடரில், யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் அணி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது. காலி ஹிக்கடுவையில் நடைபெற்று வரும் தொடரில், யாழ்.மாவட்ட அணி, அம்பாந்தோட்டை மாவட்டத்துடனான போட்டியில் 3 ஓட்டங்களாலும், களுத்துறை மாவட்டத்துடனான போட்டியில் 61 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று காலிறுதிச்சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது.

இந்த இரு போட்டிகளிலும் யாழ்ப்பாண அணி சார்பில் சகலதுறைப் பெறுபேறுகளை வெளிப்படுத்திய ரெனோஜன், சாரங்கன், மதுஜன், மயூசன் மற்றும் ஹரிஹரன் ஆகியோர் சிறப்பாட்டத்துக்கான விருதுகளைப் பெற்றுள்ளனர். (க)



## கச்சதீவில் சுகாதாரச் சீர்கேடு

# உணவுகள் விற்றவருக்குத் தண்டத்துடன் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

யாழ்ப்பாணம், ஜூலை 6
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தின்போது, சுகாதாரச் சீர்கேட்டுடன் உணவுகளை விற்பனை செய்தவருக்கு, 24 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், 3 குற்றச்சாட்டுகளில் ஒவ்வொன்றுக்கும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாதங்கள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற உற்சவத்தின்போது, அங்கு அமைக்கப்பட்டிருந்த உணவு விற்பனை நிலையங்கள் நெடுந்தீவுப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜெ. ஜெனற் ஜோன்சன் தலைமையிலான பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் பரிசோதனை செய்யப்பட்டன.

இதன்போது சுகாதாரமற்ற முறையில் இயங்கிய முல்லைத்தீவைச் சேர்ந்த நபருக்குச் சொந்தமான உணவகத்தில் தேநீர் தயாரிக்கும் பகுதி சுகாதாரமற்ற முறையில் காணப்பட்டமை, உணவுப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு முரணான வகையில், பழங்கள் விற்பனை செய்தமை, உணவு கையாள்வோர் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமை போன்ற குறைபாடுகள் கண்டறியப்பட்டன. இதனையடுத்து நெடுந்தீவு பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் உணவக உரிமையாளருக்கு எதிராக, ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த வழக்கு விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரணை செய்த நீதிவான், மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் 24 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்தார். அத்துடன் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாதங்கள் சிறைத்தண்டனையும் விதித்தார். (க)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தாயாரின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்குப் பணவரவு இருந்தாலும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்களுடன் ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். வாழ்க்கைத் துணை கேட்பதை வாங்கிக் கொடுத்து மகிழ்விப்பீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும்.

**கடகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். ஆனால், நண்பர்கள் உங்கள் தேவையை அறிந்து செய்யும் உதவி ஆறுதல் தரும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குக் குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்குத் தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வீட்டுப் பராமரிப்புப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்குத் திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும்.

**கும்பம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர் மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## சிறைக்குள் பாயும் நச்சுப் படலம் !

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளில் 70 சதவீதமானோர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்று ஜனாதிபதி தலைமையில் கூடிய 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டுச் சபைக் கூட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவல், ஒட்டுமொத்த தேசத்தையும் பேரதிர்ச்சிக்குள் ஆழ்த்தியுள்ளது. இந்த ஒற்றைப் புள்ளிவிவரம், இரண்டு மிகக் கொடூரமான யதார்த்தங்களை நம் கண்முன்னே நிறுத்துகின்றது. முதலாவது, இன்று நாட்டில் நிகழும் பெரும்பாலான குற்றச்செயல்களின் ஆணிவேராகப் போதைப்பாவனையே திகழ்கிறது. இரண்டாவது, குற்றவாளிகளைத் திருத்தும் உன்னத இடங்களாக இருக்கவேண்டிய சிறைச்சாலைகளுக்குள்ளேயே போதைப்பாவனை எவ்விதத் தடையுமின்றித் தாராளமாக அரங்கேறுகின்றது. தண்டனை பெற்ற பின்னரும் கைதிகள் போதைக்கு அடிமையாகவே தொடர்வது, நாட்டின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பு மற்றும் நீதிக்கட்டமைப்பின் தோல்வியையே அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டுகின்றது.

இந்த அவல நிலைக்குப் பின்னால் இருக்கும் காரணங்களை நாம் ஆழமாக ஆராயவேண்டும். போதைக்கு அடிமையானவர்கள் தங்களின் அன்றாடப் போதைத் தேவைகளுக்கான பணத்தைத் திரட்டும் நோக்கோடே திருட்டு, கொள்ளை, கொலை மற்றும் வழிப்பறி போன்ற கொடூரக் குற்றங்களில் ஈடுபடுகின்றனர். மறுபுறம், வெளி உலகை விடச் சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் தாராளமாகக் கிடைப்பதற்குச் சிறைச்சாலை நிர்வாகத்தில் மண்டியிட்டுக் கிடக்கும் ஊழல்களும், சில கறுப்பு ஆடுகளின் மறைமுகத் துணைபோகலுமே பிரதான காரணங்களாகும். கடுமையான பாதுகாப்பு வளையங்களையும் மீறிச் சிறைக்குள் போதைப்பொருள் பாய்கிறது என்றால், அங்கு சட்ட அமுலாக்கம் எந்தளவுக்கு நீர்த்துப் போயுள்ளது என்பதைச் சொல்லத் தேவையில்லை. கைதிகளை வெறும் குற்றவாளிகளாக மட்டும் பார்த்து அடைத்து வைப்பதனால் சிறைகளில் இடநெருக்கடி ஏற்படுகிறதே தவிர, அவர்களின் மனநிலையில் எவ்வித மாற்றமும் நிகழ்வதில்லை.

இத்தகைய ஆபத்தான நிலையை வேரோடு பிடுங்கி எறிய அரசாங்கம் உடனடியாகப் பல்தரப்பு உத்திகளைக் கையாள வேண்டும். போதைக்கு அடிமையானோரை வெறும் கைதிகளாகப் பாராது, அவர்களை மருத்துவ ரீதியாகக் குணப்படுத்த வேண்டிய நோயாளிகளாக அணுகுவதே முதற்படியாகும். இதற்கெனத் துறைசார் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளபடி, போதைக்கு அடிமையானோரை மறுவாழ்வுக்கு உட்படுத்தும் புதிய சட்டத்தை உடனடியாக வர்த்தமானியில் வெளியிட்டுச் சட்டமாக்க வேண்டும். போதைக்கு அடிமையானவர்களைச் சாதாரணக் குற்றவாளிகளுடன் சிறையில் அடைக்காமல், அவர்களுக்கெனத் தனியான தடுத்துவைப்பு மற்றும் கட்டாய மறுவாழ்வு மையங்களை உருவாக்கி ஆன்மிக, உளவியல் ஆலோசனைகளை வழங்கவேண்டும். அதே வேளை, சிறைக்குள் போதைப்பொருளைக் கடத்தும் ஊழியர்களுக்கு எதிராக எவ்வித சகிப்புத்தன்மையுமின்றி பணிநீக்கம் மற்றும் ஆயுட்காலச் சிறைத்தண்டனை போன்ற கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சிறைச்சாலைகளின் பாதுகாப்பை நவீன டிஜிற்றல் கண்காணிப்பு மற்றும் மோப்ப நாய் பிரிவுகளின் மூலம் பலப்படுத்த வேண்டும்.

ஒரு நாட்டின் சிறைச்சாலைகள் சீரழிந்தால் அந்த நாட்டின் எதிர்காலமே இருண்டுவிடும். ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய திசைகாட்டி அரசாங்கம், இதனை ஒரு சாதாரணப் புள்ளிவிவரமாகக் கடந்து செல்லாமல், போதையின் பிடியில் சிக்கியுள்ள 70 வீதக் கைதிகளின் வாழ்வை மீட்டெடுக்கத் தீவிரமாகச் செயற்படவேண்டும். போதைப்பொருள் விநியோகச் சங்கிலியை முற்றாகத் துண்டிப்பதோடு, அடிமட்டக் கைதிகள் முதல் சர்வதேசப் போதைக்கடத்தல் மாபியாக்கள் வரை அனைவரையும் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கவேண்டும். அப்போதுதான் சிறைச்சாலைகளின் நெரிசலைக் குறைப்பதுடன், குற்றங்கள் குறைந்த, ஆரோக்கியமானதொரு 'போதையற்ற நாட்டை' எமது எதிர்காலச் சந்ததிக்காக நம்மால் உருவாக்க முடியும்.





### பொய்யாமொழி

**அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து**

**பொருள்:** பொறாமைப்படுதலாகிய தவறான நெறியில் துன்பம் ஏற்படுதலை அறிந்து, பொறாமை காரணமாக அறமல்லாதவைகளைச் செய்யார் அறிவுடையோர்.




## நுளம்புப் பெருக்க இடங்கள் அறிவிக்க அவசர இலக்கம்!



**கொழும்பு,ஜூலை 6**
**பொதுமக்கள் தங்களது பகுதிகளில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை அடையாளம் கண்டு அறிவிப்பதற்கு வசதியாக தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

அதற்கமைய,டெங்கு நிவாரண மையத்தின் 011 796 6366 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பினை ஏற்படுத்தி அறிவிக்க முடியும். டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலில் 'கிளீன் ஸ்ரீலங்கா'செயலகம், சுகாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள் மற்றும் பொலிஸார், ஊடக அமைச்சு ஆகியன இணைந்து முன்னெடுக்கும் வேலைத்திட்டம் குறித்த கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளரின் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது தற்போது டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## மண்சரிவு

நுவரெலியா, ஜூலை 6
அட்டன் நுவரெலியா பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மண்சரிவு காரணமாக குறித்த வீதிப் போக்குவரத்து ஒருவழிப்பாதையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.. பிரதான வீதியில் ஏற்பட்டுள்ள மண்மேட்டினை அகற்றும் பணி நடைபெற்று வருவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்துள்ளனர். இந்த வீதியில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் விழிப்பாகவே இருக்க வேண்டும் என நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

## ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் பலி

கொழும்பு,ஜூலை 6
கடவத்த, இஹல பியன்வில பகுதியில் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.
இவ்வாறு உயிரிழந்தவர் கடவத்த பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.
குறித்த நபர் தனது சகோதரர் ஒருவரின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டிருந்த போது, அங்கு ஏற்பட்ட முரண்பாடு முற்றியதன் காரணமாகவே இந்தக்கொலை நடந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ச-இ)

## இரு துப்பாக்கிகள் மோதரையில் மீட்பு

கொழும்பு, ஜூலை 6
கொழும்பு, மோதரையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு ரி-56 ரக துப்பாக்கிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.
போதைப்பொருள் விவகாரம் தொடர்பில் தற்போது பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் 'மோதர சத்துர' எனப்படும் சந்தேகநபரிடமிருந்து பெறப்பட்ட இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மீட்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகளும் பயன்படுத்தக்கூடிய நல்ல நிலையில் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## யானை தாக்கி ஒருவர் சாவு!

கொழும்பு,ஜூலை 6
சூரியபுர, ஜனசவிவெவ பகுதியில் யானை தாக்கியதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இவ்வாறு உயிரிழந்தவர் வான் எல பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவராவார். குறித்த நபர் மற்றுமொருவருடன் வயல்வெளிக்குச் சென்றிருந்த போதே இவ்வாறு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்பது முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் குறித்து சூரியபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவின், வசந்தோற்சவத்தின் போது கண்ணகி அம்மன் புஸ்பக விமான வாகனத்தில் எழுந்தருளி அருள்பாலித்தார். (க-100)

# அரசியல் தலையீட்டுடனான ஆட்சேர்ப்புக்கு முற்றுப்புள்ளி

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 6**

**அரசியல் தலையீட்டுடனான ஆட்சேர்ப்புகளுக்கு முடிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, வெளிப்படைத்தன்மையுடன் தகுதி அடைப்படையில் தெரிவு செய்யும் முறைமை பின்பற்றப்படுவதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

நாட்டில் இலவச சுகாதார சேவையின் மனிதவள வினைத்திறனை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலும் அரச மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்காக சுகாதார உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச்செய்யப்பட்ட 627 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு, முடிந்தவரை அதிகமானோரை சேவையில் சேர்க்க தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தற்போதுள்ள வெற்றிட எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, ஏறத்தாழ 160,000 பேர் ஏற்கனவே பொதுச்சேவையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்தில், சுகாதாரப் பணியாளர்கள், இலங்கை போக்குவரத்துச்சபை ஊழியர்கள் மற்றும் ரயில்வே திணைக்கள ஊழியர்கள் உள்ளிட்ட சேவைகளுக்கான ஆட்சேர்ப்புகள் பெரும்பாலும் அரசியல் தலையீட்டின் அடிப்படையிலேயே நடைபெற்றன. தற்போதைய அரசாங்கம் அந்த முறையை முற்றிலுமாக மாற்றி, வெளிப்படைத் தன்மை, நேர்மை மற்றும் தகுதிகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆட்சேர்ப்புச் செயன்முறையை நிறுவியுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக, பகிரங்க விளம்பரங்கள் மூலம் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் சம வாய்ப்புகள் வழங்கும் முறை பின்பற்றப்படுகிறது-என்றார். (ச-இ)

# தலைமறைவாகியிருந்த 12 சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை 6

அச்சுவேலி பொலிஸ் பிரிவில் நீதிமன்ற வழக்குகளுக்கு முன்னிலையாகாமல் நீண்ட நாள்களாக தலைமறைவாகி இருந்த 12 பேர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்பத் கிங் தலைமையிலான பொலிஸ் குழுவினர் பல்வேறு பகுதிகளில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அதேவேளை புன்னாலைக்கட்டுவன் ஐயனார் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் 6 போதைமாத்திரைகளுடனும், நீர்வேலி சந்திப் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் 25 வயதுடைய மற்றொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் சில தினங்களுக்கு முன்பு இதே குற்றச்சாட்டில் 6 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவித்தவராவார். கைதுசெய்யப்பட்ட அனைவரையும் மேலதிக சட்டநடவடிக்கைக்காக மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-23)

# நெடுந்தீவு ம.வி. மாணவர்கள் மாகாணப் போட்டிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூலை 6

தீவக வலய கணித வினாடி வினாப் போட்டியில் பங்குபற்றிய நெடுந்தீவு மகா வித்தியாலய மாணவர்கள் இருவர், மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். குறித்த பாடசாலையைச் சேர்ந்த செ.அன்ற் கிஷானா(தரம் 9 ) முதலாமிடத்தையும், கலிஸ்ரஸ் கபிஸன் ( தரம் 11) இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர். வலயமட்டப் போட்டியில் வெற்றியீட்டிய இவர்கள் இருவரும் மாகாணமட்டப் போட்டியிலும் பங்குபற்றவுள்ளனர். (க)



தருமை ஆதீன தேவாரப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் கலாநிதி திருத்தணி சுவாமிநாதன் ஓதுவார், நல்லூர்த் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அனிருத்தனனால் கௌரவிக்கப்பட்டார்.(க)



# திருநெல்வேலி மாணவர்களுக்காக புதிய அறநெறி வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 6

திருநெல்வேலியைச் சேர்ந்த மாணவர்களுக்கான, புதிய அறநெறி வகுப்புகளின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய முன்றலில் நடைபெற்றது.

பொங்கல், சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றதைத் தொடர்ந்து, ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து அறநெறி மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஒய்வுநிலை அதிபர் இராமலிங்கக் குருக்கள் பசுபதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலய அதிபர் ஆ. ரஜீவன், உப அதிபர் ஜே.பிரபாகரன், ஆசிரியர் ஞா. வேல்ரூபன், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கனடா நாட்டில் வாழ்ந்து வரும் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் 2003 ஆம் ஆண்டு அணி பழைய மாணவர் சங்கத் தலைவி திருமதி சுகன்யாவின் முழுமையான நிதிப்பங்களிப்பில் குறித்த அறநெறி வகுப்புகள் இலவசமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 8 மணி முதல் முற்பகல் 10 மணி வரை தொடர்ச்சியாக இடம்பெறும். அறநெறி வகுப்புகளில் 146 மாணவர்கள் இணைந்துள்ளனர். 4 ஆசிரியர்கள் குறித்த மாணவர்களுக்கான கற்பித்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (க-66)



# விசேட வாகனத்தில் சுப்பிரமணியனை கதிர்காமம் அழைத்துச் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை 6

வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமக் கந்தனின் ஆடிவேல் விழாவை முன்னிட்டு, செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமக் கந்தன் ஆலயம் நோக்கிச் செல்லும் பாதயாத்திரைக் குழுவினருடன், இணைந்துள்ள சுப்பிரமணியன் என அழைக்கப்படும் நாய்க்கு, விசேட பாதுகாப்பு வாகனமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உகந்தை முதல் கதிர்காமம் வரையிலான பயணத்தின் போது, விசேட வாகனமொன்றில் நாயைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் வரையான பாதயாத்திரையின் போது, பக்தர்கள் குமண தேசியப் பூங்கா மற்றும் யால தேசியப் பூங்கா ஊடாகப் பயணிக்க வேண்டியுள்ளது.

இந்த வனப்பகுதிகளில் சிறுத்தைகள் போன்ற ஆபத்தான விலங்குகளால் குறித்த நாய்க்கும் ஆபத்து ஏற்படலாம். இதனால், இந்தப் பகுதிகளைக் கடந்து செல்வதற்கு மட்டும் விசேட வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த நாய் கடந்த [illegible]யாத்திரையில் பக்தர்களுடன் இணைந்து பயணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நவீன நெல் உலர்த்தும் இயந்திரங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவில்

கொழும்பு, ஜூலை 6
நாள் ஒன்றுக்குத் தலா 10 மெட்ரிக் தொன் வரையான நெல்லை உலர்த்தும் திறன் கொண்ட, சுமார் 10 மில்லியன் ரூபா பெறுமதியான 50 நவீன தொழில்நுட்ப நெல் உலர்த்தும் இயந்திரங்களை நாடு பூராகவும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நெல் உலர்த்தும் இயந்திரங்கள் தேவைப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்மூலம் விவசாயிகள் தமது அறுவடைகளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்து அதிக விலையைப் பெற்றுக்கொள்ளவும், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களான விவசாயிகள் மிக எளிதாக இந்த உலர்த்தும் இயந்திரங்களைப் பயன்படுத்தி தமது அறுவடைகளை உலர்த்திக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும் என்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# அரச அதிபர் வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 6
யாழ். மாவட்டத்தின் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டுத் திறன்களை ஊக்குவிக்கும் நோக்கில் நடத்தப்படும், 2026ஆம் ஆண்டுக்கான அரச அதிபர் வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டிகள், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக மைதானத்தில் நேற்று ஆரம்பமாகின. தேசியக் கொடி மற்றும் பிரதேச செயலகங்களின் கொடிகள் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவினராலும் வண்ணமயமான பலூன்கள் வானில் பறக்கவிடப்பட்டன. தொடர்ந்து யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் போட்டிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

திருவிழாக் கோலம் பூண்டுள்ள வடமராட்சி கிழக்கு மைதானத்தில் போட்டிகள் அனைத்தும் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்று வருகின்றன. (க-27)





# ஓட்டோத் தரிப்பிடத்துக்கு கொட்டகை அமைப்பு

பருத்தித்துறை, ஜூலை 6
பருத்தித்துறை நகரசபையினரால், நவீன சந்தைத் தொகுதியிலுள்ள வாடகை முச்சக்கரவண்டித் தரிப்பிடத்துக்கு தகரத்திலான கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. ஆளுங்கட்சியின் உறுப்பினர் ஜெயானந்தம் ஜெயகோபியால் கொண்டுவரப்பட்ட பிரேரணையை அடுத்து, குறித்த கொட்டகை நகரசபையால் அமைக்கப்பட்டுள்ளது. இதேவேளை பருத்தித்துறை நவீன சந்தைத் தொகுதியில் பொலிஸாருக்கென தனியான அறை ஒன்றும் ஒதுக்கப்பட்டுள்ளது. (க)

# 12 கிலோ கஞ்சாவுடன் இருவர் சிக்கினர்!

கொழும்பு, ஜூலை 6
நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் போதைப்பொருள் ஒழிப்பு விசேட நடவடிக்கையின் கீழ், அநுராதபுரம் மற்றும் ஹொரண ஆகிய பகுதிகளில் பொலிஸாரால் நடத்தப்பட்ட முற்றுகைகளின்போது, 12 கிலோவுக்கும் அதிக எடையுடைய கேரளக் கஞ்சா மற்றும் பெருமளவிலான சட்டவிரோத மதுபானங்களுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக 39 மற்றும் 37 வயதுடைய சந்தேகநபர்களே கைதாகியுள்ளனர். (ச-இ)

# பிரிவுபசாரமும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,ஜூலை 6
அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் மற்றும் இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்கான பிரிவுபசாரம் மற்றும் மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றன. ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி. ஜெந்தினி சிவபாலன், இடமாற்றம் பெற்றுச்செல்லும் இ.ஜனகரன் . க.அரிகரன், ச. பாலரூபன் மற்றும் செல்வி. வி. அனுசா ஆகியோருக்கான பிரிவுபசாரமும், 2025 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றன. பாடசாலைச் சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர். (க)




# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜூலை 6
தொல்புரம் மத்தியில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன. வலி.மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் ச.ஜெயந்தனின் முயற்சியில், தொல்புரம் மத்தி சனசமூக நிலையத்தில் வைத்து உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க-63)

# கைத்தொலைபேசி விற்பனையாளர் உரிமம் பெறுவதற்கு கால அவகாசம்!


கொழும்பு,ஜூலை 6
உரிய அனுமதிப்பத்திரமின்றி கைத்தொலைபேசிகளை விற்பனை செய்பவர்கள் தமக்கான உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படவுள்ளது தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, அனுமதிப்பத்திரம் இல்லாத சில்லறை விற்பனை நிலையங்களில் நுகர்வோரால் கொள்வனவு செய்யப்படும் கைத்தொலைபேசிகளின் சேவை இணைப்பு அல்லது பாதுகாப்புச் சேவைகள் தொடர்பாக எழும் எவ்விதப் பிரச்சினைகளுக்கும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு பொறுப்பேற்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மன்னாரில் 47 பேருக்கு டெங்கு முசலி, மாந்தை மேற்கில் தீவிரம்



மன்னார், ஜுலை 6

**நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், மன்னார் மாவட்டத்தில் இதுவரை 47 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம்.எச்.எம்.அஸாத் தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் ஒட்டுமொத்தமாக டெங்குப் பாதிப்பு குறைவாகக் காணப்பட்டாலும், மன்னார் மாவட்டத்தின் குறிப்பிட்ட சில சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. மன்னார் நகர்ப் பகுதியில் 23 நோயாளர்களும் நானாட்டான் பகுதியில் 10 நோயாளர்களும் மடுப் பகுதியில் 6 நோயாளர்களும் முசலி மற்றும் மாந்தை மேற்கு பிரிவுகளிலும் அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பொதுமக்கள் தங்களது வீட்டுச் சூழலையும், அரச மற்றும் தனியார் நிறுவனப் பணியாளர்கள் தங்களது அலுவலக வளாகத்தையும் தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் சுத்தப்படுத்துவதற்கு ஒதுக்கவேண்டும். வீடுகளில் உள்ள குளிர்சாதனப் பெட்டிகளின் பின்புற நீர்த்தேங்கிகளை அடிக்கடி கவனித்துச் சுத்தம் செய்ய வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஒன்றிணைந்து வாராந்த அடிப்படையில் பாடசாலை வளாகங்களை முழுமையாகப் பரிசோதித்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். காய்ச்சல் ஏற்பட்டால் 24 மணித்தியாலங்களுக்குள் மருத்துவரை நாடவேண்டும். குறிப்பாகச் சிறுவர்கள், கர்ப்பிணிகள், முதியவர்கள் 2 நாள்களில் காய்ச்சல் குறையாத பட்சத்தில், மாவட்ட பொது மருத்துவமனைக்குச் சென்று டெங்குப் பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியமாகும் - என்றார். (ச-56)

## சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்துக்கு தண்டத்துடன் சீல்

முல்லைத்தீவு, ஜுலை 6

முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட முள்ளியவளைப் பகுதியில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையில், சுகாதாரச்சீர்கேட்டுடன் இயங்கிய பிரபல உணவகத்துக்குச் சீல் வைக்கப்பட்டதுடன், தண்டமும் விதிக்கப்பட்டது.

முள்ளியவளை சந்தைக்கு அருகில் அமைந்துள்ள குறித்த உணவகம் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்டதை அடுத்து, தண்ணீரூற்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கஜலவனால், முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம், குறித்த உணவகத்துக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்ததுடன், உணவகத்தைச் சீல் வைக்கவும் அனுமதி வழங்கியது. இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற தண்ணீரூற்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கஜலவன் மற்றும் முல்லைத்தீவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரவீன் ஆகியோர் நீதிமன்ற உத்தரவின் பேரில் குறித்த உணவகத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை சீல் வைத்தனர். (க)


## பாதாளக் குழுக்களுக்கு உதவிய 200 பொலிஸார்!

### விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜுலை 6

பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களிடம் இருந்து மாதந்தோறும் இலஞ்சம் பெற்று வந்ததாகக் கூறப்படும் சுமார் 200 பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து அரச புலனாய்வுப் பிரிவு விசாரணைகளைத் தொடங்கியுள்ளது. பாதாள உலக மற்றும் போதைப்பொருள் கடத்தல்களை ஒடுக்குவதற்கு இவ்வாறான ஊழல் அதிகாரிகள் பெரும் தடையாக இருக்கின்றனர்.

பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவருடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் கீழ், பொலிஸ் விசேட அதிரடிப்படையின் முன்னாள் கட்டளையிடும் அதிகாரியும், கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பாக இருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான வருண ஜயசுந்தரவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அண்மையில் விசாரணை நடத்தியுள்ளது. இலங்கையில் பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பை முழுமையாக ஒடுக்குவதற்காக, பொலிஸ் திணைக்களத்துக்குள் இருக்கும் 'கறுப்பு ஆடுகளை' அடையாளம் கண்டு, அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)



## மண்ணித்தலை நோக்கி நல்லூரிலிருந்து யாத்திரை

யாழ்ப்பாணம், ஜுலை 6

பூநகரி மண்ணித்தலைச் சிவன் ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க மகா கும்பாபிஷேகத்தை (குடமுழுக்கு) முன்னிட்டு, யாழ். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து புனித தரிசன யாத்திரை நேற்றுக் காலை 7 மணிக்கு பக்திபூர்வமாக ஆரம்பமானது. ஈழத் திருநாட்டில் நிரந்தரமான அமைதியும், சாந்தியும், சமாதானமும் நிலவ வேண்டியும், சோழர் காலத்துத் தொன்மையைப் பறைசாற்றும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் சிறக்க வேண்டியும் இந்த யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

**6 மாதத்தில்**

## சுங்கத்தின் வருமானம் 1,373 பில்லியன் ரூபா!

கொழும்பு, ஜுலை6

இலங்கை சுங்கத் திணைக்களம் இந்த ஆண்டின் இதுவரையான முதல் ஆறு மாத காலப்பகுதியில் மாத்திரம் 1,373.7 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டி சாதனை படைத்துள்ளது.

இதன்மூலம் கடந்த ஜுன் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டின் முதல் அரையாண்டுக்காக விதிக்கப்பட்டிருந்த வருமான இலக்கை சுங்கத் திணைக்களம் வெகுவாக விஞ்சியுள்ளசாக சுங்க ஊடகப் பேச்சாளரும், சுங்க சிரேஷ்ட பணிப்பாளருமான சந்தன புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். ஆண்டின் முதல் பாதிக்காக சுங்கத் திணைக்களத்திற்கு 1,060.5 பில்லியன் ரூபா வருமான இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனினும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட 313 பில்லியன் ரூபா மேலதிக வருமானத்தை ஈட்டி சுங்கத் திணைக்களம் சாதனை நிலை நாட்டியுள்ளது. (ச-இ)

## கேக் தயாரிப்புப் போட்டியில் கண்டிப் பெண் முதலாமிடம்



யாழ்ப்பாணம், ஜுலை 6

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கேக் தயாரிப்புப் போட்டியில் கண்டியைச் சேர்ந்த பெண்ணொருவர் முதலிடத்தைப் பெற்று, ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசையும் பெற்றுக்கொண்டார். Jaffna City Hotel இன் ஏற்பாட்டில் 'CAKE CROWN COMPETITION 2026' எனும் கேக் தயாரிப்புப் போட்டி அண்மையில் நடத்தப்பட்டது. குறித்த போட்டியில் 18 போட்டியாளர்கள் பங்கேற்று, தமது திறமைகளை வெளிக்காட்டினர். இதில் கண்டியைச் சேர்ந்த பெண் முதலிடத்தைப் பெற்று ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள், இரண்டாம் இடத்தைப்பெற்று 50 ஆயிரம் ரூபா பணப் பரிசையும், மூன்றாம் இடத்தைப் பெற்றவர் 25 ஆயிரம் ரூபா பணப் பரிசையும் பெற்றுக்கொண்டனர். அத்துடன் போட்டியில் பங்குபற்றியவர்களை ஊக்குவிக்கும் முகமாக 10 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





## அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் தெல்லிப்பழை, உடுவில் வசம்


யாழ்ப்பாணம், ஜூலை 6

2026ஆம் ஆண்டுக்கான அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்தை, தெல்லிப்பழை மற்றும் உடுவில் பிரதேச செயலகங்கள் சம புள்ளிகள் பெற்று தமதாக்கிக் கொண்டன.

மருதங்கேணிப் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போட்டிகளில், முதலாவது போட்டியாக யாழ்.மாவட்டச் செயலகத்துக்கும் மருதங்கேணிப் பிரதேச செயலகத்துக்கும் இடையிலான பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி இடம்பெற்றது.


இந்தப் போட்டியில் யாழ்.மாவட்டச் செயலக அணி வெற்றியீட்டியது. ஆண்கள், பெண்களுக்கான கயிறுமுத்தல் போட்டிகளும் இடம்பெற்றன. பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இடையிலான மகிழ்வூட்டும் போட்டிகளும் நடைபெற்றன. தொடர்ந்து பரிசளிப்பு விழா இடம்பெற்றது. நிகழ்வில் அரச அதிபர் சுற்றுப் போட்டிகளான துடுப்பாட்டம் (ஆண்/பெண்), உதைப்பந்தாட்டம், கரம், சதுரங்கம், பூப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், தாச்சி (ஆண்/பெண்), கயிறிழுத்தல்(ஆண்/பெண்) போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளுக்கு அரச அதிபர் வெற்றிக்கிண்ணங்கள், சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டன. (க)

## வீரதீரக் கலைகளுடன் நிறைமணித் திருவிழா



யாழ்ப்பாணம்,ஜூலை 6

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவின், நிறைமணித் திருவிழாவின் போது சூரிய வாகனத்தில் எழுந்தருளிய கண்ணகி அம்மன் வீரதீரக் கலைகளுடன் வலம் வந்து அருள் பாலித்தார். வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 15ஆம் திகதி ஆரம்பமான நிலையில், 20ஆவது நாளான நேற்றுமுன்தினம் நிறைமணித் திருவிழா இடம்பெற்றது. அபிஷேகம் இடம்பெற்று பூசை வழிபாடுகளுடன் காலைப் பூசை நிறைவடைந்தது. தொடர்ந்து மாலைத் திருவிழா இரவு 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசையுடன் ஆரம்பமானது. சூரிய வாகன அலங்காரத்தில் எழுந்தருளிய கண்ணகி அம்மன் உள்வீதி வலம் வந்து வெளி வீதி உலா வரும் போது, தமிழர் பாரம்பரிய தற்காப்புக் கலைகள் அரங்கேற்றப்பட்டன. இதன்போது பிரபல தற்காப்புக் கலை ஆசான் சென்சி பாபு தலைமையில், சிவலீமன் சிலம்பம் தற்காப்புக் கலை மன்றத்தின் மாணவர்களால் பாரம்பரியக் கலையான சிலம்பம், சுருள்வாள், வாள் கேடயம், தீப்பந்தம் போன்ற வீரதீர நிகழ்வுகள் மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் நிகழ்த்தப்பட்டிருந்தன. (க-100)



நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் வழிபாடுகள் அண்மையில் இடம்பெற்றன. (க-17)







## தலைவர் கிண்ண உதைபந்தாட்டம் அரையிறுதி ஆட்டத்தில் 4 அணிகள்


யாழ்ப்பாணம், ஜூலை 6

40 வயதுக்கு மேற்பட்டோர் அணிகளுக்கிடையிலான தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளைமறுதினம் புதன்கிழமை மாலை இடம்பெறவுள்ளன. இதில் கொலின்ஸ் வல்வை, றேஞ்சர்ஸ் ஐக்கிய விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதி ஆட்டங்களில் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. வடமராட்சி சிரேஷ்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் க.சொக்கன் (சசிகுமார்) ஞாபகார்த்தமாக அபிராமி இரும்பகத்தின் அனுசரணையுடன், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி, கடந்த மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

குறித்த போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், நாளைமறுதினம் புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் குழு ஒன்றில் முதலிடம் பெற்ற கொலின்ஸ் அணியுடன், வல்வை அணியும், மாலை 5 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில், குழு இரண்டில் முதலிடம் பெற்ற ரேஞ்சர்ஸ் அணியுடன் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இவ் ஆட்டங்களில் வெற்றிபெறும் அணிகள் தலைவர் கிண்ணம் 2026 இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நள்ளிரவில் கொழுந்துவிட்டெரியும் கல்லுண்டாய் குப்பைமேடு

## அதிகாரிகள் பாராமுகம்; பிரதேச மக்கள் அவதி!

**யாழ்ப்பாணம், ஜூலை 6**
**யாழ்ப்பாணம் மானிப்பாய் பிரதேசசபைக்குச் சொந்தமான கழிவு சேகரிப்பு நிலையத்தின் குப்பைமேடு கடந்த வெள்ளிக்கிழமை திடீரெனப் பற்றியெரிந்ததால், அந்தப் பகுதியில் பெரும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.**

மானிப்பாய் பிரதேசசபையின் கழிவு சேகரிப்பு மற்றும் இயற்கை உரம் தயாரிப்பு நிலையமானது கல்லுண்டாய் குடியேற்றத் திட்டத்துக்கு மிக அண்மையில் அமைந்துள்ளது.

இந்த மையத்திலுள்ள குப்பை மேட்டிலேயே கடந்த வெள்ளிக்கிழமை இரவு திடீரெனத் தீப்பற்றி, புகை மண்டலத்துடன் எரியத் தொடங்கியது. குடியிருப்புகளுக்கு மிக அருகில் தீ பரவியதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதுடன் பதற்றமான சூழலும் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து யாழ். மாநகரசபையின் தீயணைப்புப் படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டு, தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு நீண்ட போராட்டத்துக்குப்பின்னர் தீ முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்தக் கழிவு சேகரிப்பு மையத்தில் கடந்த காலங்களில் எவ்வித மான தீ விபத்துகளும் ஏற்பட்டதில்லை. கடந்த காலங்களில் கழிவுகள் முறையாகத் தரம் பிரிக்கப்பட்டு, முறையான பாதுகாப்பு வழிமுறைகள் பின்பற்றப்பட்டதால் இவ்வாறான விபத்துகள் தடுக்கப்பட்டன.

ஆனால், தற்போது சீரான முறையில் கழிவுகள் தரம் பிரிக்கப்படாததே இந்தத் தீ விபத்துக்கு முக்கியமான காரணமாகும். குப்பைமேடு எங்களது குடியிருப்புக்கு மிக அருகில் உள்ளதால், அதனைப் பிரதேச சபையினர் சீராகப் பராமரிக்கத் தவறியுள்ளனர். இதனால் துர்நாற்றம் மற்றும் சுகாதாரச் சீர்கேடுகளால் நாங்கள் தினமும் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றோம். பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக விளங்கும் இந்தக் குப்பைமேட்டுப் பிரச்சினையைத் தீர்க்க அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அப் பகுதிவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-27)


# குடிதண்ணீர்த் திட்டத்தை நெடுந்தீவில் விஸ்தரிக்குக!

## ஈ.பி.டி.பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 6
நெடுந்தீவு மக்கள் எதிர்கொண்டுள்ள குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில், அங்கு ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வரும் கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தை மேலும் விஸ்தரிக்குமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து ஈ.பி.டி.பி. கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில்,

கடந்த 2010ஆம் ஆண்டில் அப்போதைய அமைச்சராக இருந்த டக்ளஸ்தேவானந்தாவின் முயற்சியினால் ஆர்.ஓ. பிளான்ற் எனப்படும் கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டபோது, அது 900 குடும்பங்களை இலக்குவைத்தே வடிவமைக்கப்பட்டது. ஆனால், தற்போது நெடுந்தீவின் மக்கள் தொகை 1,400 குடும்பங்களைக் கடந்துள்ளதால், நாளாந்தம் விநியோகிக்கப்படும் 80,000 லீற்றர் நீரைக் கொண்டு முழுமையான தேவையை நிவர்த்தி செய்ய முடியாத தட்டுப்பாடு நிலவுகிறது. நெடுந்தீவின் புவியியல் சூழல் காரணமாக நிலத்தடி நீரை நேரடியாகப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளதால், கடல்நீரை நன்னீராக்கும் தற்போதைய கட்டமைப்பை உடனடியாக விஸ்தரிப்பதே இதற்கான ஒரே தீர்வாகும். எனவே, தற்போதைய அநுர அரசாங்கம் இந்த விடயத்தில் விசேட அவதானம் செலுத்தி, மக்களின் வாழ்வாதாரத்துக்கு அவசியமான குடிதண்ணீர் தாராளமாகக் கிடைப்பதை உறுதி செய்ய இந்தத் திட்டத்தை உடனடியாக விஸ்தரிக்க வேண்டும் - என்றுள்ளது. (ச-27)




# ஆரோக்கியமான பாடசாலைப் போட்டியில் யாழ்.இந்துவுக்கு ரூ.1.5 மில்லியன் பணப்பரிசு

யாழ்ப்பாணம்,ஜூலை 6
2026ஆம் ஆண்டுக்கான இலங்கையின் ஆரோக்கியமான பாடசாலைப் போட்டியில், யாழ்.இந்துக் கல்லூரி தேசியமட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்று, 1.5 மில்லியன் ரூபா பணப்பரிசைப் பெற்றுள்ளது. கல்லூரியின் ஆரோக்கியக் கழகம், மாணவர்களின் உடற்பருமன் சுட்டெண் (Body Mass Index BMI) அளவீட்டை முறையாக மேற்கொண்டு, அதிக அல்லது குறைந்த உடற்பருமன் கொண்ட மாணவர்களை ஆரோக்கியமான நிலைக்கு மாற்றும் நோக்கில் திட்டமிட்ட செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, மாணவர்களின் உடல்நலத் தகவல்களைப் பதிவு செய்து, தொடர்ந்து கண்காணிப்பதற்காக Health Guard எனும் செயலியும் (www.jhchealthguard.online) உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, யாழ் இந்துக் கல்லூரிக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (க)

# கிளிநொச்சியில் கைவிடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் மீள இயங்கும்!

## இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு


கிளிநொச்சி,ஜூலை 6
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரசாயனத் தொழிற்சாலை மற்றும் குருஞ்சாதீவு உப்பளம் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மிக விரைவில் அவற்றினூடாக பிரதேச மக்களுக்கான தொழில் வாய்ப்பை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலத்துக்கு உட்பட்ட பகுதிகளுக்கான அபிவிருத்திக் கூட்டம், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது வீதி அபிவிருத்திப் பணிகள், சுகாதார வசதிகள், வீட்டுத் திட்ட முன்னேற்றங்கள், சட்டவிரோத மணல் அகழ்வு, விவசாய முன்னேற்றங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களில் இடை நடுவே கைவிடப்பட்ட வீடுகளை விரைவில் பூரணப்படுத்தி, பயனாளிகளுக்குப் பெற்றுக் கொடுக்க தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்தார்.

கூட்டத்தில் அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸார், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (க-113)





# மிருசுவிலில் முதன்முதலாக சிறுபோக நெல் அறுவடை!

யாழ்ப்பாணம்,ஜூலை 6
மிருசுவில் நுணுவில் வயல்வெளியில் பரீட்சார்த்தமாக முதன்முதலாக மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கை பெரும் வெற்றியளித்துள்ளது. இதற்கான அறுவடையை நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். இளம் விவசாயி ஒருவரின் தன்னம்பிக்கையில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை இவ்வாறு வெற்றியளித்துள்ளது.

இதனை ஏனைய விவசாயிகளும் பின்பற்றி நெற்செய்கையில் பலன் அடைய வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கிருந்த விவசாயிகளிடம் கேட்டுக்கொண்டார். (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்

பிறப்பு 18 · 05 · 1958



இறப்பு 04 · 07 · 2026

## லலிதா சிவராசா (ரஞ்சி)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் 281/2, கச்சேரி கண்டி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட லலிதா சிவராசா (ரஞ்சி) அவர்கள் 04.07.2026 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், சிவராசா அவர்களின் அன்பு மனைவியும், சோபிதா, கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும், சொரூபனின் அன்பு மாமியாரும், லக்ஷனியாவின் பாசமிகு பேர்த்தியும், புஸ்பராணி, றஞ்சன், சற்குணசிங்கம், ரவீந்திரன், ரவிச்சந்திரன், நட்னேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம், சதாசிவம், சரஸ்வதி மற்றும் இந்திராணி, பரமேஸ்வரி, மகாலிங்கம், பாலசுப்பிரமணியம், ராதா, புஸ்பஜெயந்தி, விஜயா, கண்மணி, ஸ்ரீலதா, உமாதேவி, சாரதாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2026) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்.
சொரூபன் - 077 238 0203

281/4, கச்சேரி கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 61818) N-1

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் ஏகானந்தசிவம்

தோற்றம் 04.08.1953 — மறைவு 04.07.2026

(ஓய்வுநிலை முகாமைத்துவ உத்தியோகத்தர் - யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் யாழ் மாநகரசபை)

மண்டைதீவு ஆறாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 340, கோவில் வீதி நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஏகானந்தசிவம் (ஓய்வு நிலை முகாமைத்துவ உத்தியோகத்தர்- யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் யாழ் மாநகரசபை) அவர்கள் கடந்த (04.07.2026) சனிக்கிழமை காலமானார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
இல, 340, கோவில் வீதி, நல்லூர்.
077 557 3860 - அபிசன், 077 967 7158 - அனுஜன்

(CS/61819) J-1

# மரண அறிவித்தல்



## நவரத்தினசாமி பாலசரஸ்வதி

சாவல்கட்டு ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினசாமி பாலசரஸ்வதி அவர்கள் கடந்த (04.07.2026) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா - சுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - வள்ளியம்மாள் தம்பதியரின் மருமகளும், நவரத்தினசாமி (குணம் - வல்வெட்டித்துறை) அவர்களின் அன்பு மனைவியும், உமாவதி (லண்டன்), ஒப்பிலாமணி (லண்டன்), நடனசிகாமணி (லண்டன்), ஜெகசோதி (பிரான்ஸ்), இரத்தினேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், தர்மரத்தினம் (கனடா), தர்சிகா (லண்டன்), கிரிஜா (லண்டன்), சால்ட்டன் (பிரான்ஸ்), விமலதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆதவன், அபிராமி, அஸ்வினி, Dr. தர்சன், பூமிகா, நிலானி, கம்சிகா, அனுசிகா, மதுமிதா, சாருமதி, பவீந்திரன், வினுசிகா, வினோசிதா, அஜினன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், புவனேஸ்வரி அம்மா (புஸ்பம்), தங்கராணிஅம்மா (குட்டியா), காலஞ்சென்ற சந்திரலிங்கம் (நாகப்பன்) மற்றும் விமலா (மதி - லண்டன்), காலஞ்சென்ற ரதி மற்றும் ரவீந்திரன் (ரவி - சுவிஸ்), சுசிலா (கலா - இந்தியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2026) திங்கட்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 08.05.1950 — மறைவு 04.07.2026

முருகமூர்த்தி கோவிலடி,
சாவல்கட்டு,
ஆனைக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்
077 836 6362

(CS/32102) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலையை எதிர்கொள்வல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு



கிளிநொச்சி, ஜூலை 6

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒழுங்குபடுத்தலில், கிளிநொச்சி பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் இணையனுசரனையில், எல்–நினோ காலநிலை மாற்றம் அதினால் பொதுமக்கள் எதிர்கொள்ளப்போகும் சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு, மாவட்டச் செயலக திறன்விருத்தி பயிற்சிநிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் எல்–நினோ காலநிலையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா விளக்கமளித்தார். கருத்தரங்கில் மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப்பணிப்பாளர் கே.அழகக்கோன், பெண்கள் வாழ்வுரிமைச்சங்கத்தின் இணைப்பாளர் வல்லிபுரம் வாசுகி, கமக்காரர் அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவசங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (கு)

# எல்–நினோ தாக்கத்தின் எதிரொலி ஜனவரி மார்ச் வரை வறட்சி நீடிக்கும்

## இரு வாரங்களில் தேசிய செயற்றிட்டம்

**கொழும்பு,ஜூலை 6**

**எல் -நினோ தாக்கம் மற்றும் தென்மேற்குப் பருவமழை மிக மோசமாக வலுவிழந்தமை காரணமாக, அடுத்த ஓகஸ்ட் மாதமும், பின்னர் வரவிருக்கும் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியிலும் நாடு முழுவதும் கடுமையான வறண்ட வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமன்னே தெரிவித்துள்ளார்.**

இருப்பினும், இடைப்பட்ட ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வழக்கத்தைவிடக் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். அதேவேளை எல்- நினோ இயற்கை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய குடிதண்ணீர்த் தட்டுப்பாடு, விவசாயப் பாதிப்புகள் மற்றும் மின்சார நெருக்கடி போன்ற பாதிப்புகளைக் குறைப்பது குறித்து, சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக படபெண்டி தலைமையில் நேற்றுமுன்தினம் அமைச்சகத் தலைவர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதன்போது பல்வேறு துறையினராலும் சமர்ப்பிக்கப்பட்ட அவசர முன்மொழி வுகளை விரிவாக ஆராய்ந்து, வறட்சியை எதிர்கொள்வதற்கான 'தேசிய செயற்றிட்டம்' வகுக்கப்படவுள்ளது. அடுத்த இரு வாரங்களுக்குள் அந்தச் செயற்றிட்ட அறிக்கை நாட்டுக்கு அறிவிக்கப்படும் என அமைச்சர் தம்மிக படபெண்டி குறிப்பிட்டுள்ளார். (ச-இ)


# INVITATION FOR BID 2026_01
# PROVINCIAL DEPARTMENT OF INDIGENOUS MEDICINE,NORTHERN PROVINCE

1. **The Chairman, Department Procurement Committee,** on behalf of the **Provincial Commissioner, Provincial Department of Indigenous Medicine,Northern Province** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the contract amount exceeds Rs.5.0 million"**
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the **Schedule** (Section 5) for **SBD 3** Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from **06/07/2026** To **20/07/2026** in between 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Provincial Commissioner, Provincial Department of Indigenous Medicine,Northern Province, No.572/3 Hospital Road, Jaffna. (T.P:021-222-0824, Fax:021-222-0822, email:accountantpdim@gmail.com) from 09:00 hrs to 15:00 hrs. during the period from 06/07/2026 To 20/07/2026 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Department Procurement Committee, Provincial Department of Indigenous Medicine,Northern Province, No.572/3 Hospital Road,Jaffna. on or before 10:30:00 AM at 21/07/2026** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Provincial Department of Indigenous Medicine,Northern Province, No.572/3 Hospital Road,Jaffna.** commencing at **10:30:00 AM on 13/07/2026**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | from 06/07/2026 To 20/07/2026 |
| | Pre-Bid Conference | At 10:30:00 AM on 13/07/2026 |
| | Closing and Opening of Bids | At 10:30:00 AM on 21/07/2026 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/B/IM/VA/2026/01 | Construction of Watcher Hut at RSH Kanakarayankulam | 1.27 | 60 | C9, C8 and C7 (Buildings) | 2,000.00 | 13,000.00 | 06/10/2026 | 08/09/2026 |
| MRC/NP/B/IM/VA/2026/01 | Urgent Repair Work at Rural Siddha Hospital, Nainamadu (Fencing Repair) | 4.98 | 105 | C8, C7 and C6 (Buildings) | 3,000.00 | 50,000.00 | 06/10/2026 | 08/09/2026 |
| MRC/NP/B/IM/JA/2026/01 | Urgent Repair Work at Rural Siddha Hospital, Kodikamam (Repair of Hospital Building and Toilets) | 3.70 | 90 | C9, C8 and C7 (Buildings) | 3,000.00 | 37,000.00 | 06/10/2026 | 08/09/2026 |
| MRC/NP/B/IM/MU/2026/01 | Urgent Repair Work at Rural Siddha Hospital, Mallavi (Fencing Repair) | 5.10 | 90 | C8, C7 and C6 (Buildings) | 3,000.00 | 52,000.00 | 03/11/2026 | 06/10/2026 |

Chairman,
Department Procurement Committee ,
Provincial Department of Indigenous Medicine,Northern Province
No.572/3 Hospital Road,Jaffna.

(CR/47/04) J-1


# தேசிய சேமிப்பு வங்கியால் கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 6

தேசிய சேமிப்பு வங்கி ஊர்காவற்றுறை கிளையின் ஏற்பாட்டில், தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் தீவக வலயத்திலுள்ள வேலணைக் கோட்டம் மற்றும் ஊர்காவற்றுறைக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளின் மாணவர்களைப் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (கு)

# அணிகள் ஏல நிகழ்வு

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில், JVL 3.0 அணிகள் ஏல நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ராஜா கிறீம் கவுஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.வ. செந்தூரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், சிறப்பு விருந்தினர்க ளாக யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. அநுராகாந்தன், யாழ் மாவட்ட விளையாட்டு பயிற்றுநர் செ. சதீஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (கு)


# மரண அறிவித்தல்



தோற்றம் 16.04.1954

மறைவு 04.07.2026

## நாகேந்திரராஜா பஞ்சபூரணம்

வதிரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரராஜா பஞ்சபூரணம் அவர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், தெட்சிணாமூர்த்தி - ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகேந்திரராஜா (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/நெல்லியடி மத்திய கல்லூரி மற்றும் St.Thomas Prep school Colombo) அவர்களின் அன்பு மனைவியும், காண்டீபன் (கொழும்பு), மேனகா (கனடா), ஜனார்த்தனி (சிங்கப்பூர்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், சௌமியா, பிரபராஜ், குன்றக்குமரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், குலராஜேந்திரம், சீவரட்ணம், காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் தர்மராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திராணி, காலஞ்சென்ற சறோஜினிதேவி (பேபி) மற்றும் விமலாதேவி ஆகியோரின் மைத்துனியும், சஷ்வினன் (றோயல் கல்லூரி கொழும்பு), சிவேஷ்னன் (Wycherley school), கவின், ஏகன், அதிதி, நிலா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.07.2026) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது சீனாப்புலம் வதிரி நெல்லியடி வடக்கு எனும் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

077 757 0044

(ஏ 16220) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## வெப்ப அலையில் தகிக்கும் ஐரோப்பா

# பிரான்ஸில் ஒரேவாரத்தில் 2,025 பேர் உயிரிழப்பு!

இஸ்லாமாபாத்,ஜூலை 6

**பிரான்ஸில் நிலவிவரும் கடுமையான வெப்பஅலையால் ஜூன் கடைசி வாரத்தில் மட்டும் 2,025 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்நாட்டு பொதுச் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனச் சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

இது இறப்பு சான்றிதழ்களை அடிப்படையாக கொண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு என்பதால், உயிரிழப்புகள் இன்னும் அதிகமாக இருக்கக்கூடும் எனவும் அச்சம் தெரிவித்துள்ளார். பரிஸ் பிராந்தியத்தில் மட்டும் உயிரிழப்புகள் ஒரே வாரத்தில் 62% உயர்ந்துள்ளன. ஐரோப்பாவின் பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் பெல்ஜியம் நாடுகளில் மொத்தமாக 3700 இறப்புகள் ஜூனின் கடைசி வாரத்தில் மட்டும் பதிவாகி உள்ளன. பெல்ஜியத்தில், ஜூன் 18 முதல் ஜூன் 29 வரை சுமார் 1,222 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 530 பேர் 85 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள். நெதர்லாந்தில் 480க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதில் பெரும்பாலானோர் 80 வயதுக்கு மேற்பட்டவர்கள். ஜூன் 20 முதல் 28 வரை நீடித்த இந்த வெப்பஅலை ஐரோப்பாவில் இதுவரை பதிவானதிலேயே மிக மோசமானது என்றும், இது மின் உற்பத்தியில் இடையூறுகளை ஏற்படுத்தி, உள்கட்டமைப்பைச் சேதப்படுத்தி, சுகாதார அமைப்புகளை நிலைகுலையச் செய்தது என்றும் நிபுணர்கள் கூறியுள்ளனர். (ச-இ)

*1,454 அடி உயரத்தில்*

# காதலை வெளிப்படுத்திய ரஷ்ய இளம் ஜோடி கைது

இஸ்லாமாபாத்,ஜூலை 6

நியூயோர்க் நகரில் உள்ள 1,454 அடி உயர எம்பயர் ஸ்டேட் கட்டடத்தில் பாதுகாப்பு கயிறுகள் எவையும் இன்றி ஏறிய காதலை வெளிப்படுத்திய ஜோடியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எம்பயர் ஸ்டேட் கட்டடம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள உலகப் புகழ்பெற்ற 1,454 அடி உயரம் கொண்டது.

இந்தக் கட்டடத்தின் உச்சிக்கு ரஷ்யாவைச் சேர்ந்த அஞ்சேலா மற்றும் இவான் ஆகிய காதல் ஜோடி பாதுகாப்பு கயிறுகள் எதுவும் இன்றி ஆபத்தான முறையில் ஏறினர்.

காதல் ஜோடி அங்கு காற்றில் பறந்தபடி உலக அமைதி மற்றும் காதலின் சக்தி குறித்த பதாகை ஒன்றை அவர்கள் விரித்தனர். பின்னர், அந்த அந்தரத்து உச்சியில் வாலிபர் இவான் முழங்காலிட்டு, தன் காதலியிடம் திருமண விருப்பத்தை கூறி மோதிரம் அணிவித்தார்.

இதனைப் பார்த்து கீழே நின்ற பொதுமக்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த நியூயோர்க் பொலிசார், கட்டடத்தின் உச்சிக்குச் சென்று அந்தச் சாகச காதல் ஜோடியை பத்திரமாக மீட்டதுடன் பொதுமக்களுக்கு ஆபத்து விளைவித்தல் மற்றும் அனுமதியின்றி அத்துமீறி நுழைந்த குற்றங்களுக்காக கைது செய்து சிறையில் அடைத்தனர். (ச-இ)



# கொங்கோவில் எபோலா 473 பேர் உயிரிழப்பு

இஸ்லாமாபாத்,ஜூலை 6

மத்திய கிழக்கு ஆபிரிக்க நாடான கொங்கோவில் எபோலா வைரஸ் தொற்று 1,502 பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், இவர்களில் 473 பேர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர் என்று கொங்கோ சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

உலகிலேயே மிகக் கொடிய வைரஸ் நோய்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்த எபோலா, தற்போது கொங்கோ மட்டுமின்றி உகாண்டா, லைபீரியா போன்ற பிற ஆப்பிரிக்க நாடுகளிலும் பரவி அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றது. எபோலா வைரஸ் பரவல் தீவிரமடைந்து வருவதை அடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமெரிக்கா உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளும் கொங்கோ மற்றும் அதன் அண்டை நாடுகளுடனான விமான போக்குவரத்துக்குக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது (ச-இ)



# பாகிஸ்தானில் பஸ் கவிழ்ந்து 40 பேர் உயிரிழப்பு!

இஸ்லாமாபாத்,ஜூலை 6

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மற்றும் கைபர் பக்துன்வா மாகாணங்களின் எல்லையில் அமைந்துள்ள செஹ்ரானிசோப் நெடுஞ்சாலையில் பஸ் ஒன்று 80 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 40 பேர் உயிரிழந்துள்ளனர். 8 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். உயிரிழந்தோர் சடலங்கள் மீட்கப்பட்டு அடையாளம் காணப்பட்டு வருகிறது. பஸ் விபத்தில் பலியானோருக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி இரங்கல்தெரிவித்துள்ளார். இந்தவிபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ச-இ)

## 125 நாள்களாக

# அலி கமேனியின் உடல் பாதுகாக்கப்பட்டது எப்படி?



இஸ்லாமாபாத்,ஜூலை 6

அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டுத் தாக்குதலில் அவர் உயிரிழந்ததாகக் கூறப்பட்ட ஈரானின் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனியின் உடல் 125 நாள்களாக பாதுகாக்கப்பட்டதன் பின்னணியில் உள்ள அதிநவீன அறிவியல் விவரங்கள் வெளியாகியுள்ளன. மத்திய கிழக்கில் போர்ச்சூழல் உச்சத்தில் இருந்த காலகட்டத்தில் ஏற்பட்ட ஈரானின் பாதுகாப்புப் பதற்றம் காரணமாக, கமேனியின் இறுதிச் சடங்குகளை உடனடியாக நடத்த முடியாமல் போனது. இதன் காரணமாக, தெஹ்ரானின் அதீத பாதுகாப்பு வளையத்துக்குள் உள்ள ரகசிய நிலத்தடி மருத்துவ வசதி ஒன்றில், நவீன அறிவியல் மற்றும் பாரம்பரிய எம்பாமிங் முறைகள் இணைந்து அவரது உடல் பாதுகாக்கப்பட்டது. உடல் திசுக்கள் அழுகாமல் மிக நீண்ட காலம் நிலைத்திருக்கப் மருத்துவ நடைமுறைகள் பயன்படுத்தப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி உடலின் இயற்கை திரவங்கள் அனைத்தும் முற்றாக நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக கிளிசரின், மற்றும் ஆல்கஹால் போன்ற சிறப்பு இரசாயனக் கலவைகள் தமனிகள் வழியாகச் செலுத்தப்பட்டன

இதன் பின்னர், மிகக் குறைந்த வெப்பநிலை மற்றும் காற்று புகாத, முற்றிலும் சீல் வைக்கப்பட்ட சிறப்புப் பெட்டகத்தில் உடல் வைக்கப்பட்டது. ஈரப்பதம் மற்றும் பக்டீரியாக்களின் தாக்கம் ஏதும் ஏற்படாதவாறு முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில், வாரந்தோறும் மருத்துவ நிபுணர்கள் உடலைக் கண்காணித்து வந்தனர். உடலின் தோல் சுருங்கிவிடாமலும், அதன் இயற்கையான நிறம் மற்றும் முக அமைப்பு பாதிக்கப்படாமலும் இருக்க, பிரத்யேக மெழுகு மற்றும் சிலிகான் அடிப்படையிலான நவீன பராமரிப்பு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

# விண்வெளியிலிருந்து பூமியின் துருவ ஒளி



இஸ்லாமாபாத்,ஜூலை 6

பூமியின் மேலே நெளிந்து வளைந்து செல்லும் துருவ ஒளியின் ரம்மியமான காட்சிகளை உள்ளடக்கிய காணொளி ஒன்று இணையத்தளத்தில் வைரலாகி வருகிறது. விண்வெளி வீராங்கனை சோஃபி அடெனோட் தனது விண்வெளிப் பயணத்தின் போது இந்தத் துருவ ஒளியின் காட்சிகளைப் பதிவு செய்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 'அஸ்வெசும' திட்டத்திலிருந்து 4 இலட்சம் குடும்பங்கள் நீக்கம்

## அடுத்தாண்டில் அரசு நடவடிக்கை

**கொழும்பு,ஜூலை 6**
**நாட்டின் பொருளாதார மீட்பு நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைக்கு அமைய, 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தில் உள்ள பயனாளிகளின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று ராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இதன்படி, எதிர்வரும் 2027ஆம் ஆண்டில் மேலும் 400,000 குடும்பங்கள் இந்த நலன்புரித் திட்டத்திலிருந்து நீக்கப்படவுள்ளன. அத்துடன், 2028ஆம் ஆண்டின் இறுதிக்குள் 'மிகவும் ஏழ்மையான' பிரிவினரைத் தவிர மற்ற அனைத்துப் பயனாளிகளும் இந்தத்திட்டத்திலிருந்து முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பது சர்வதேசநாணயநிதியத்தின் கடுமையான நிபந்தனையாகும். அதற்குப்பதிலாக, 2030ஆம் ஆண்டுக்குள் இவ்வாறான குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களை வறுமையிலிருந்து மீட்பதே அரசாங்கத்தின் நீண்டகால நோக்கம் - என்றார். (ச-இ)

# அரசியல் தீர்வு சாத்தியமற்றது

## டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 6
தென்னிலங்கையில் ஆட்சிக்கு வரும் எந்தவொரு ஆட்சியாளரும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை தாமாகத் தரப்போவதில்லை. எமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான சூழலை நாமே உருவாக்க வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாணங்களை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வை வலுப்படுத்தி, முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கே இந்தியாவும் அனுசரனை வழங்கும். ஆனால் தற்போது, சிலர் தமிழகத் தலைவர்களைச் சந்தித்து சர்வதேச விசாரணை, சமஷ்டி என்று சயலாப அரசியலை முன்னெடுக்கின்றனர். இது எமது மக்களுக்கு எந்த நன்மைகளையும் பெற்றுத்தராது. என்றார். (சு-27)

# கதிர்காம ஆடிவேல் திருவிழா; மலையக மக்கள் பாதயாத்திரை

கொழும்பு,ஜூலை 6
வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காம ஆலய ஆடி வேல் திருவிழாவில் கலந்துகொள்வதற்காக, மலையகத்திலிருந்து பாதயாத்திரை செல்லும் முதலாவது பக்தர்கள் குழு நேற்றுமுன்தினம் மஸ்கெலியா நகரிலிருந்து தமது பாத யாத்திரை பயணத்தை ஆரம்பித்துள்ளது. மஸ்கெலியா, ஹட்டன், நுவரெலியா, வெலிமடை, பண்டாரவளை, கும்பல்கம, ஹதேகனுவ, வெல்லவாய, எத்னாவல, குடாபெஹெர மற்றும் தனமல்வில ஊடாக சுமார் 280 கிலோமீற்றர் தூரத்தை இவர்கள் பாத யாத்திரை மூலம் கடக்கவுள்ளனர். (ச-அ)

# மீன்களின் விலை அதிகரிப்பு




கொழும்பு,ஜூலை 6
கடற்கொந்தளிப்புக் காரணமாக கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், சந்தையில் மீன்களின் விலை அதிகரித்துள்ளது.
தற்போது நிலவும் கடற்கொந்தளிப்புக் காரணமாக மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதன் விளைவாக மீன் வரத்து குறைந்திருப்பதாக மீன்சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# பஸ்...

பொருந்தும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பேருந்து கட்டணக் கணிப்பீட்டு முறைமை தொடர்பாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கவலை வெளியிட்டுள்ளார்.
கடந்த 20 வருடங்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்த பாரம்பரிய தூர அடிப்படையிலான கணிப்பீட்டு முறைமையிலிருந்து விலகி, தற்போதைய திருத்தத்தில் புதிய மாற்றங்கள் புகுத்தப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இருப்பினும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்ட திருத்தப்பட்ட பேருந்துக் கட்டணப் பட்டியல் திட்டமிட்டபடி இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.எனவே, இந்த மாற்றக் காலத்தில் பயணிகள் மற்றும் நடத்துநர்களுக்கு இடையே தேவையற்ற முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் பொதுமக்களை ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ள அவர், புதிய கட்டணக் கணிப்பீட்டு முறைமையில் உள்ள குறைபாடுகளை அதிகாரிகள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (அ-எ-இ)

# பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு மைக்கலின் நேசக்கரத்தால் உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை 6
மைக்கலின் நேசக்கரம் அமைப்பின் ஊடாக, நொதேர்ன் எலைட் கால்பந்தாட்டக் கழகத்தின் (NEFC) மாதாந்த உதவித்தொகை வழங்கும் செயற்றிட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. வடமராட்சி துன்னாலைப் பகுதியில் மூன்று சிறுவர்கள் பெற்றோரை இழந்து வயதான அம்மம்மாவுடன் வாழ்ந்து வருகின்றனர். எவ்வித வருமானமும் இன்றி வறுமையிலுள்ள இந்தச் சிறுவர்களின் கல்வி மற்றும் வாழ்வாதார உதவிக்காக மாதாந்தம் 15 ஆயிரம் ரூபாவை வழங்க நொதேர்ன் எலைட் கால்பந்தாட்ட கழகம் முன்வந்துள்ளது. அதற்கமைவாக நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை சந்தியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் வைத்து 15 ஆயிரம் ரூபா பணம் மற்றும் உலருணவு பொதி வழங்கப்பட்டது. (க-100)




# மரண அறிவித்தல்

## ஞானமுத்து பத்திமா இரத்தினமேரி (காந்தி)



**தோற்றம்** 06.05.1970 — **மறைவு** 05.07.2026

தோலகட்டி வசாவிளானைப் பிறப்பிடமாகவும், பலாலி தெற்கு வசாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமுத்து பத்திமா இரத்தினமேரி (காந்தி) அவர்கள் நேற்று (05.07.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சில்வேஸ்திரி ஞானமுத்து மற்றும் - மாக்கிறேட் தம்பதியரின் புதல்வியும், ஜேம்ஸ் பற்றிக் ஜெயக்குமார், காலஞ்சென்ற பத்திமா ஜீவமேரி, மற்றும் பத்திமா அமலமேரி, பத்திமா செல்வமேரி (நெதர்லாந்து), காலஞ்சென்றவர்களான அன்ரன் செல்வக்குமார், மரிய சந்திரகுமார் மற்றும் பத்திமா வசந்தமேரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஞ்சா, யோகநேசராசா, காலஞ்சென்ற யோசேப் மனோகரன், மற்றும் பேனாட், விமலாதேவி, யசியானா, நோபேட் ஆகியோரின் மைத்துனியும், டிலானி, நிஷாந்த், கனிஸ்டன், பிரசாந்த், நிக்சன், நிஷாந்தினி, கிளைக்சன், நிஷாந்தினி, றொஷாந்த், சங்கீதா, டாலிங்டன், யோனத்தான் (நெதர்லாந்து) ஆகியோரின் சித்தியும், ஸ்ரீவ், கிங்ஸ்டன், ஸ்ரெபனிகா ஆகியோரின் மாமியும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.07.2026) திங்கட்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் வசாவிளான் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித யாகப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/32103) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## காணிகளின்...

**பலாலியில் தொடர் போராட்டம்**

பலாலி உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள தங்களது சொந்தக் காணிகளை விடுவிக்கக் கோரி, காணி உரிமையாளர்கள் மூன்றாவது வாரமாகவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை பலாலிச் சந்தியில் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். காலை 8.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், "எங்கள் நிலங்களை எமக்கே மீள வழங்க வேண்டும்" என வலியுறுத்தி மக்கள் கோஷங்களை எழுப்பினர்.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் அமைப்பாளர் சட்டத்தரணி பவானி பொன்சேகா, இலங்கை தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதன்போது, சட்டத்தரணி பவானி பொன்சேகா மக்கள் பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்ற வழக்குகள் மற்றும் காணி விடுவிப்பு தொடர்பான தற்போதைய சட்ட ரீதியான முன்னேற்றங்களை மக்களுக்கு விளக்கிக் கூறினார்.

இதனிடையே, போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கடும் வெயிலில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தற்காலிக கொட்டகை ஒன்றை அமைக்க முற்பட்ட போது, பலாலிப் பொலிஸார் அதற்கு கடும் தடை விதித்தனர். "வடக்கில் கொட்டகை அமைத்து போராடினால், தெற்கிலும் கொட்டகை அமைத்து போராடுவார்கள்; அதனால் கொட்டகை அமைக்க அனுமதிக்க முடியாது" என பொலிஸார் விசித்திரமான காரணத்தைக் கூறி தடுத்ததாக மக்கள் கவலை வெளியிட்டனர்.

**கேப்பாபிலவில் முற்றுகை**

இதேவேளை, முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கேப்பாபிலவில், 55 குடும்பங்களுக்குச் சொந்தமான 59.5 ஏக்கர் பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி மக்கள் முன்னெடுத்து வரும் தொடர் போராட்டம் நேற்று 12ஆவது நாளை எட்டியது.

நேற்றுக் காலை கேப்பாபிலவு இராணுவப் பிரதான வாயிலை முற்றுகையிட்டு மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்களின் பயன்பாட்டிலிருந்த பாடசாலை, ஆலயங்கள், பொது மண்டபம் போன்றவற்றை இராணுவம் தொடர்ந்து தன்வசம் வைத்துள்ளதாகக் குற்றம் சாட்டிய மக்கள், அங்கிருந்து பேரணியாக போராட்டப் பந்தலை அடைந்தனர்.

"எமது நிலம் எமது உரிமை", "இராணுவமே வெளியேறு" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு மக்கள் முழக்கமிட்டனர். பல ஆண்டுகள் கடந்தும் தீர்வு கிடைக்கவில்லை என கவலை வெளியிட்ட போராட்டக்காரர்கள், ஜனாதிபதியும் ஆளுநரும் இதில் உடனடியாகத் தலையிட வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் வி. மணிவண்ணன், மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந், அரசியல் செயற்பாட்டாளர் எஸ். தவபாலன், உள்ளூராட்சிமன்றப் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர். தங்களது நிலங்கள் முழுமையாக மீட்கப்படும் வரை போராட்டம் ஓயாது என மக்கள் இதன்போது தெரிவித்தனர். (அ-எ-26)

## மாவலி...

மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் கடற்தொழில், நீரியல், கடல் வளங்கள் அமைச்சரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொண்டு இந்த அபிவிருத்திப் பணிகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

நெடுந்தீவு மக்களின் நீண்டகால போக்குவரத்து அசௌகரியங்களுக்கு தீர்வாக அமையவுள்ள இந்த வீதி அபிவிருத்தித் திட்டமானது, இந்தப் பகுதியின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு முக்கியமான பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன், யாழ். மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் என். பிரபாகரன், திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-எ-66)

## நெடுந்தீவில்...

அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வழிகாட்டலில், சுமார் 40 மில்லியன் ரூபா நிதிச் செலவில் அமையவுள்ள இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் கட்டுமானப் பணிகள் அனைத்தும் அடுத்த நான்கு மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் கடற்றொழில், நீரியல், கடல் வளங்கள் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொண்டு இந்த அபிவிருத்திப் பணியை அடிக்கல் நட்டு ஆரம்பித்து வைத்தனர்.

விழாவின் ஒரு பகுதியாக, 20 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட தகுதியான பயனாளிகளுக்கான முதற்கட்டக் காசோலைகள் அமைச்சர்களால் அதிகாரபூர்வமாகக் கையளிக்கப்பட்டன. அத்துடன், அந்தப்பகுதி மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பாக புதிய புத்தகப் பைகளும் இதன்போது வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன், யாழ். மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் என். பிரபாகரன், இலங்கைப்பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரிகள், நெடுந்தீவுக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள், கடற்படை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-எ-66)

## மருதங்கேணியில்...

யிடப்பட்ட நில அளவைக் கோரிக்கை மற்றும் காணி, அபிவிருத்தி அமைச்சரின் வர்த்தமானிக் குறிப்பு ஆகியவற்றுக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி, மருதங்கேணி (ஜே/428) கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள, 'தேவதுரவு' என்று அழைக்கப்படும் 11.2657 ஹெக்ரேயர் விஸ்தீரணம் உடைய காணியே இவ்வாறு சுவீகரிக்கப்படவுள்ளது. எதிர்வரும் 2026 ஜூலை 09 ஆம் திகதி முதல் தொடர்ந்து வரும் வேலைநாள்களில் தினமும் காலை 9 மணி முதல் மாலை வரை இந்த நிலஅளவை பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்தக் காணிக்கு உரிமை கோரும் நபர்கள் எவராவது இருப்பின், காணி தொடர்பான தங்களின் உரிமை ஆவணங்களுடன் குறிப்பிட்ட நாட்களிலே நிலஅளவை நடைபெறும் இடத்திற்கு வந்து, எல்லைகளைக் காண்பித்து நிலஅளவைப் பணிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று நில அளவைத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ-எ-26)

## நீர்கொழும்பு...

உயிரிழந்துள்ளதுடன், மேலும் 35 கைதிகள் காயமடைந்து நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அத்துடன், நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் 10 பேருக்கு அவசர சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று நேற்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

மோதலைத் தொடர்ந்து சிறைச்சாலையில் பெரும் அமைதியின்மை ஏற்பட்டது. பெண் கைதிகள் குழுவொன்று சிறைச்சாலையின் கூரையின் மீது ஏறி தங்களது போராட்டத்தை ஆரம்பித்த நிலையில், அதைத் தொடர்ந்து ஆண் கைதிகள் குழுவொன்றும் சிறைச்சாலைக் கூரையின் மீது ஏறி தங்களது போராட்டத்தை முன்னெடுத்ததால் அங்கு பதற்றம் மேலும் அதிகரித்தது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பான இரகசியத் தகவல் ஒன்றை கைதி ஒருவர் வெளிப்படுத்தியமையே இந்த இரு குழுக்களுக்கிடையிலான மோதலுக்கு பிரதான காரணம் என ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகள் சுட்டிக்காட்டுகின்றன.

சம்பவத்தை அடுத்து சிறைச்சாலை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டதுடன், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக பெருமளவிலான பொலிஸாரும், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் சிறைச்சாலை வளாகத்தில் குவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். (அ-எ-இ)

## தனிநபர்...

யுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கான சட்ட வரைவாளர் திணைக்களத்தின் அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டு, அது தற்போது அரச அச்சகத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே, இன்னும் சில தினங்களில் இந்த விசேட வர்த்தமானி உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் என்றார்.

திட்டமிட்டபடி தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் சில குறிப்பிட்ட பிரிவுகள் 2027 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இருந்து முதற்கட்டமாக நடைமுறைக்கு வரவுள்ளன. அதைத் தொடர்ந்து, அடுத்த 12 மாத காலப்பகுதிக்குள் இந்தச் சட்டத்தின் முழுமையான நடைமுறையாக்கப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் வருண ஸ்ரீ தனபால மேலும் தெளிவுபடுத்தியுள்ளார். (எ-இ)

## கொமேனி...

அஞ்சலி செலுத்தியுள்ளனர். ஈரான் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதிச் சபாநாயகர் ரிஸ்வி சாலி ஆகியோர் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இறுதிக் கடமைகளில் பங்கேற்றனர்.

இதன்போது, அங்கு வைக்கப்பட்டிருந்த அதிதிகளுக்கான விசேட நினைவுக் குறிப்பேட்டில் இருவரும் தமது அனுதாபச்செய்திகளைப் பதிவு செய்து கையொப்பமிட்டதுடன், நிகழ்வில் கலந்துகொண்ட பல்வேறு நாடுகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடனும் இருதரப்புக் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

இப்பயணத்தின் போது, ஈரான் இஸ்லாமியக் குடியரசுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் எம்.ஐ. பசீஹா அஸ்மி மற்றும் இலங்கைத் தூதரக அதிகாரிகள், இலங்கை நாடாளுமன்றப் பிரதிநிதிகளைச் சந்தித்து விசேட கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (அ-எ-இ)

## டெங்கு...

வைத்து, 'க்ளீன் ரீலங்கா' தேசிய திட்டத்துடன் இணைந்து இராணுவத்தினர் நேற்று டெங்கு தடுப்பு மற்றும் விழிப்புணர்வுத் திட்டத்தை முன்னெடுத்தனர்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோவின் நேரடி அறிவுறுத்தலின் கீழ், நாடு முழுவதுமுள்ள பல்வேறு படைத் தலைமையகங்களைச் சேர்ந்த 2026 இராணுவ வீரர்கள் இந்த விசேட பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கொழும்பு கோட்டை, ஹோமகம, காலி, மாத்தறை, குருநாகல், கேகாலை உள்ளிட்ட அதிக அபாயமுள்ள பல முக்கியமான பகுதிகளில் இந்நடவடிக்கை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. இதன் போது, நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யும் இடங்களைச் சுத்தம் செய்தல், பொது இடங்களில் உள்ள குப்பைகளை அகற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு டெங்கு கட்டுப்பாட்டு முறைகள் குறித்த விழிப்புணர்வுகளும் இதன்போது வழங்கப்பட்டன. (அ-எ-இ)

## விபத்தில்...

என்பவரே உயிரிழந்தவராவார். இவர் நேற்றுமுன்தினம் கல்வியங்காடு பகுதியில் சைக்கிளில் பயணித்தபோது, பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீதியரசர்கள் ஓய்வு வயதெல்லை அரசாங்கம் கைவைக்கக்கூடாது!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்பு

**கொழும்பு, ஜுலை 6**

**மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதிய வயதெல்லையைத் தன்னிச்சையான முறையில் மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கக் கூடாது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான ரஜீவ் அமரசூரிய தெரிவித்துள்ளார். நீதியரசர்களின் வயதை அதிகரிக்கும் அரசாங்கத்தின் இந்த ஆயத்தங்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் கொழும்பில் விசேட பொதுக் கலந்துரையாடல் மன்றமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.**

இதில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசியல் மற்றும் சமூகச் சூழ்நிலையில் இவ்வாறானதொரு வயதெல்லை மாற்றம் முற்றிலும் அவசியமற்றது மற்றும் பொருத்தமற்றது.

முறையே 63 மற்றும் 65 ஆகக் காணப்படும் மேன்முறையீட்டு நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதிய வயதெல்லையை அதிகரிப்பதற்காக அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்வது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது.

இதுகுறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், சட்டத்தரணி ரஜீவ் அமரசூரியவின் கையொப்பத்துடன் கூடிய கடிதமொன்றும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையைப் பாதிக்கும் இந்த வயதெல்லை அதிகரிப்புத் திட்டத்துக்கு கடுமையான எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

- என்றார். (ச-இ)



# மன்னாரில் சுகாதாரச் சீர்கேடு!

## உணவகத்துக்கு சட்டநடவடிக்கை

மன்னார், ஜுலை 6

மன்னார் நகரப் பகுதியில் இயங்கி வரும் பிரபல உணவகத்தில், சுகாதாரக் குறைபாடுகள் கண்டறியப்பட்டதை அடுத்து, அந்த உணவகத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மன்னார் நகரசபை மற்றும் மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்ட சோதனையில், குறித்த உணவகத்தில் சுகாதாரமற்ற நிலைமை கண்டறியப்பட்டது.

சுகாதாரமற்ற ஈக்கள் மொய்க்கும் சூழலில் உணவு தயாரித்தல் மற்றும் மிகவும் அசுத்தமான சூழலில் உணவு சமைத்தல், கெட்டுப்போன காய்கறிகள் உணவு தயாரிப்பதற்கு பயன்படுத்துதல் மற்றும் கோழிக் கழிவுகளால் அசுத்தமடைந்த முட்டைகளை உணவில் சேர்ப்பது, சமைத்த மற்றும் சமைக்காத உணவுகள் பிரித்தறியாது, அசுத்தமான குளிர்சாதனப் பெட்டியில் ஒன்றாகச் சேமித்து வைத்தல், சூடான உணவுகளைத் தயாரிப்பதற்கும், பரிமாறுவதற்கும் அபாயகரமான பிளாஸ்ரிக் உபகரணங்களைப் பயன்படுத்துதல், உணவகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் உரிய மருத்துவச் சான்றிதழ்கள் இன்றி உணவுத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளமை, குப்பைத் தொட்டிகளை மூடியின்றி அசுத்தமாக வைத்திருத்தல் போன்ற குறைபாடுகள் அடையாளப்படுத்தப்பட்டன. இதனையடுத்து உணவகத்தில் வைக்கப்பட்டிருந்த சுகாதாரமற்ற உணவுப் பொருள்களை பயன்படுத்துவதற்கு அதிகாரிகள் உடனடியாகத் தடை விதித்தனர்.

அத்துடன், குறித்த உணவகத்துக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் தீர்மானித்துள்ளனர். (க-56)

# அக்கிராச மன்னனுக்கு சிலை திறந்துவைப்பு



கிளிநொச்சி, ஜுலை 6

ஈழத்தில் 13ஆம் நூற்றாண்டில் அக்கராயன் பிரதேசத்தை ஆட்சி செய்த அக்கிராசன் எனும் குறுநில மன்னனுக்கு கிளிநொச்சி அக்கராயன் அம்பலப்பெருமாள் சந்தியில் சிலை அமைக்கப்பட்டு நேற்றுத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

குறித்த சிலைக்கு கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் ச.ஜீவராஜா, சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினர். (ச-55)

# நூலக நலன்புரிச் சங்கத்தால் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜுலை 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக நலன்புரிச் சமூகத்தால் நடத்தப்பட்ட "Library Premier League 1.0" துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் Dewey Dragons அணி வெற்றிக் கிண்ணத்தைத் சுவீகரித்தது.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற போட்டியில், இரண்டாம் இடத்தை Cutter Challengers அணியும், மூன்றாம் இடத்தை Brown Beaters அணியும் பெற்றுக் கொண்டன. போட்டியின் ஆட்ட நாயகன், தொடர் ஆட்ட நாயகன் மற்றும் அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர் போன்ற விருதுகளை Dewey Dragons அணியின் வீரர் மா.தங்கராசா பெற்றுக்கொண்டார். அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரராக Cutter Challengers அணியின் வீரர் ம.பிரபுராம் தெரிவு செய்யப்பட்டார். இந்தச் சுற்றுப் போட்டியில் விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் வி. காண்டீபன், பிரதி நூலகர் கலாநிதி சி.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (க)

# படகு கவிழ்ந்து விபத்து

## இருவர் மீட்பு; ஒருவர் மாயம்

திருகோணமலை, ஜுலை 6

திருகோணமலை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து சுமார் மூன்று கடல் மைல் தொலைவில் விபத்துக்குள்ளான படகில் இருந்த இரண்டு மீனவர்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த மீன்பிடிப் படகின் உரிமையாளர் காணாமற் போயுள்ளார்.

அவரைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

படகு விபத்துக்குள்ளாகியுள்ளதாக சீனக்குடா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, இந்த மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-இ)



# போலி எருமைத்தயிர் அழிப்பு; வியாபாரிகளுக்கு எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஜுலை 6

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களை ஏமாற்றி, போலியான தயாரிப்புப் பட்டிகளுடன் விற்பனை செய்யப்பட்ட பெருமளவான எருமைத் தயிர், பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், மோசடி வியாபாரத்தில் ஈடுபட்ட வெளிமாவட்ட வியாபாரிகள் இருவர் கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை நகர் பிரதான வீதியில் கடந்த சில நாள்களாக வெளிமாவட்டத்தில் இருந்து வருகைதந்த வியாபாரிகள் இருவர் எருமைத் தயிர் மற்றும் நெய் ஆகியவற்றை விற்பனை செய்து வந்துள்ளனர்.

இதுதொடர்பில் பொதுமகனால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைவாக பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதாரச் பரிசோதகர் ப.தினேஸ் தலைமையிலான குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை சம்பவ இடத்துக்கு நேரில் சென்று சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது, பொதி செய்யப்பட்டதும், உரிய நியமங்களுக்கு அமைவாக களஞ்சியப்படுத்தாமலும் தயிரை விற்பனை செய்தமை உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து இருவரும் விற்பனைக்கு வைத்திருந்த பொருள்கள் அவர்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன. அத்துடன் குறித்த இரு வெளிமாவட்ட வியாபாரிகளும் கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டனர். (க-100)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.